11 JAN 1956

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3] [தனிப் பிரதி 4 அணா

மலர் 15 ஆகஸ்ட் 1954 இதழ் 8

## கடைக்கால் முதலில்!
## கட்டிடம் பிறகு!!

முதலில் கடைக்கால் போடப்பட்டாக வேண்டும். அதன் பிறகு தான் கட்டிடத்தை எழுப்ப முடியும். அப்படி எழுப்பப் படுகிற கட்டிடம் தான் உறுதியாகவும் நீண்ட நாட்களும் நிலைத்து நிற்க முடியும். அப்படியின்றி, "கட்டிடத்தை எழுப்பி விடுவோம் முதலில்! கடைக்கால் பற்றிய செய்தியைப் பிறகு பார்த்துக் கொள்வோம்" என்று இயம்புவது சாத்தியமான செயலுமல்ல. அறிவுள்ள பணியும் ஆகாது.

எவருக்கும் தெரியக்கூடிய எளிய உண்மை இது. ஆனால் இந்த எளிய உண்மையைத்தான் இன்றளவும் உணர மறுக்கின்றன ஜில்லா போர்டுகள், முனிசிபாலிடிகள் முதலிய உள்ளாட்சி மன்றங்கள். (Local Boards.)

இந்த உள்ளாட்சி மன்றங்களின் முதற் பெரும் பணி, இவற்றின் அதிகார எல்லைகளுக்குள் வாழ்கின்ற, 5 முதல் 14 வயது வரை

யுள்ள எல்லாச் சிறுவர்களுக்கும், ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்பையும் வசதியையும் தேடித் தருவது தான்.

அப்படித் தரப்படுகிற ஆரம்பக் கல்வி, முற்றிலும் இலவசக் கல்வியாகவும், எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வியாகவும் அமைய வேண்டும்.

கட்டாய இலவச ஆரம்பக் கல்வியை, தங்கள் எல்லைகளுக்கு உட்பட்ட எல்லாப் பிள்ளைகளுக்கும் தந்துவிட்ட பிறகுதான்—அப்படித் தருவதற்குத் தேவையான பள்ளிக்கூடங்கள் அத்தனையையும் ஏற்படுத்தியதற்கு அப்புறம்தான்—அந்தப் பள்ளிக்கூடங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு அவர்களுடைய தகுதிக்கும் வாழ்க்கைத் தேவைக்கும் ஏற்ற கண்ணியமான அளவு ஊதியத்தைக் கொடுப்பதற்குத் தேவையான பல திட்டங்களைத் தீட்டி அவற்றை நடைமுறையிலும் கொண்டு வந்த பிறகுதான், இந்த உள்ளாட்சி மன்றங்கள், உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்குவது பற்றி யோசிக்க வேண்டும்.

அதுதான் முறை. அதுதான் அறிவுடமை. அதுவேதான் நாட்டின் கல்வி நிலையைச் சீர்திருத்திச் சிறப்புற அமைக்கும் சிறந்தோர் பணியுமாகும். அதுதான் உள்ளாட்சி மன்றங்கள் கடைப்பிடிக்க வேண்டிய பாதை.

ஆனால் சென்னை மாநிலத்தில் உள்ள பல உள்ளாட்சி மன்றங்கள் அந்த நியாயமான பாதை வழி செல்லவில்லை. மாறாக, அவற்றின் எல்லைக்குள், போதுமான அளவு ஆரம்பப் பள்ளிகள் இல்லாமல் இருக்கின்ற நிலையிலேயே, அந்த மன்றங்கள், பல உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்கி நடத்துகின்றன.

அப்படி, உயர்நிலைப் பள்ளிகள் பலவற்றை நடத்துகின்ற காரணத்தால், அந்த மன்றங்களால், போதுமான அளவு ஆரம்பப் பள்ளிகளை நடத்த முடிவதில்லை. அப்படி ஆரம்பப் பள்ளிகளை நடத்த முடியாத காரணத்தால், ஆரம்பப் பள்ளிகளில் படிக்க வேண்டிய பல பிள்ளைகள், படிப்பறிவின்றி வீணே அலைந்து திரிந்து தங்கள் பொன் போன்ற நேரத்தைப் பாழாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்துவதே குற்றம் என்று நாம் கூறவில்லை. எல்லாப் பிள்ளைகளுக்கும் தேவையான அளவு ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு முன்னால், இருக்கின்ற சில ஆரம்பப் பள்ளிகளின் வளர்ச்சியையும் பாழாக்குகிற வகையில், உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்துவதைத் தான் நாம் குற்றம் குற்றம் என்று அழுத்தம் திருத்தமாக அறிவிக்க ஆசைப் படுகிறோம்.

அப்படியானால், இந்த மன்றங்களின் எல்லைகளுக்குள், தேவையான அளவு ஆரம்பப் பள்ளிகள் ஏற்படுகிற வரையில், உயர்நிலைப் பள்ளிகளே தேவையில்லையா என்று சிலர் கேட்கக்கூடும். நிச்சயம் தேவை. ஆனால், அவற்றை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இந்த உள்ளாட்சி மன்றங்களுக்குக் கிடையாது, அதற்குத் தேவையான அளவு பண வசதியும் இந்த மன்றங்களுக்குக் கிடையாது. அரசாங்கமோ, அல்லது போதுமான பணவசதியுள்ள தனிப்பட்ட மனிதர்கள் அல்லது கழகங்களோ மேற்கொள்ள வேண்டிய பணி அது.

எந்தப் பணியை வேண்டுமானாலும், எந்த நேரத்தில் வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் எடுத்து நடத்தலாம் என்பது முறையாகாது.

எந்தெந்தப் பணியைச் செய்ய யார் யாருக்குத் தகுதியும் வசதியும் உண்டோ, அவரவர்கள் செய்வது தான் சிறப்பு. அப்படிச் செய்யப்பட்டால்தான், செய்யப்பட வேண்டிய எல்லாப் பணிகளும் குறைவற நிறைவேறும்.

இந்த அருமையான உண்மையைத்தான், உலகப் புலவர் திருவள்ளுவர், "இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து, அதனை அவன் கண் விடல்" என்று அழகுபட இயம்பியிருக்கிறார்.

இன்னின்ன காரணங்களால் இன்னின்ன பணிகளைச் செய்திட இன்னின்னார் தான் தகுதியுடையவர் என்பதைக் கண்டறிந்து, அந்த முறைப்படி, பணிகளை ஒப்படைத்தால்தான், பணிகள் சிறப்புற நிகழும் என்கிறார் திருவள்ளுவர்.

நியாயம்தானே! பணிகளை முடிப்பதற்குத் தேவையான பண்பும் அதுதானே!

ஆனால் ஏனோ தெரியவில்லை. நம் உள்ளாட்சி மன்றங்கள் வள்ளுவனாரின் இப் பொய்யா மொழியை இன்னமும் ஏற்க மறுக்கின்றன.

ஆனால் ஒரு மன்றம்—ஒரே ஒரு மன்றம்—சேலம் நகர ஆட்சி மன்றம்—இந்தப் பொன் மொழியின் உள்ளுறையை மனமார ஒப்புக் கொண்டு, அதன்படி நடக்கவும் முன் வந்திருக்கிறது.

சேலம் நகரத்தைப் பொறுத்த வரையில், ஆரம்பக் கல்வியைப் பெறவேண்டிய வயதுள்ள 18,000 பிள்ளைகளுக்கு, இப்போது ஆரம்பப் பள்ளிகள் இல்லை. என்றாலும், சேலம் நகராட்சி மன்றம், இதுவரையில், ஏழு உயர்நிலைப் பள்ளிகளை நடத்தி வந்திருக்கிறது.

இது எத்துணைப் பெருந்தவறு என்பதை நாம் எடுத்துக்கூற வேண்டிய அவசியமில்லை.

இந்த ஏழு உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்கு மாறாக, அவற்றிற்குச் செலவிடப்படும் பணம் முழுவதையும், புதிய ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவதற்குச் செலவிட்டிருந்தால், இப்போது ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்கு வசதியின்றித் தவிக்கும் 18,000 பிள்ளைகளும் நிச்சயம் அந்தக் கல்வியைப் பெற்றிருக்க முடியும்.

எந்தக் காரணத்தாலோ, சேலம் நகராட்சி மன்றம், இதுவரையில், இந்தத் தவறைத் திருத்திக் கொள்ள முன் வரவில்லை.

ஆனால் இப்போதாவது முன் வந்திருக்கிறதே, அதுவரையில் நாம் மிக மிக மகிழ்ச்சியடைகிறோம். சேலம் மன்றத்திற்கு நம்முடைய நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தன்னால் நடத்தப்பட்டு வருகிற ஏழு உயர்நிலைப் பள்ளிகளில், நான்கு பள்ளிகளை, யாராவது தனிப்பட்ட மனிதர்கள் அல்லது சங்கங்களிடம் உடனடியாக ஒப்புவித்து விடுவது என்று அந்த மன்றம் முடிவுக்கு வந்திருக்கிறது.

சிறந்த முடிவு—சீரிய பாதை—எல்லோராலும் பாராட்டப்பட வேண்டிய பணி.

ஆனால் பணி, இந்த அளவோடு நின்றுவிடக் கூடாது.

மிச்சமிருக்கிற மூன்று உயர்நிலைப் பள்ளிகளையும், இது போலவே, தனிப்பட்ட மனிதர்கள் அல்லது அமைப்புகளிடம், சேலம் மன்றத்தார், ஒப்படைத்துவிட வேண்டும்.

இவ்வாறு எல்லா உயர்நிலைப் பள்ளிகளையும் பிறருடைய கைகட்கு மாற்றித் தந்துவிட்டு அந்த அளவோடு நம் கடமை தீர்ந்தது என்று எண்ணித் திருப்தி அடைந்து விடுவதும் தவறு. உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தையும் பிறர் கைகட்கு மாற்றியதன் மூலமாக மிச்சமாகும் பணம் அவ்வளவையும், புதிய ஆரம்பப் பள்ளிகள் பல தொடங்குவதற்கும், ஏற்கெனவே இருக்கும் ஆரம்பப் பள்ளிகளில் மேலும் பல வகுப்புகளைத் தொடங்குவதற்கும் செலவிட வேண்டும் சேலம் நகராட்சி மன்றம்.

இதுபோது ஆரம்பக் கல்வியைப் பெறும் வாய்ப்பின்றி வாடுகிறார்களே 18,000 சேலம் சிறுவர்கள், அவர்கள் அனைவருக்கும் அந்தக் கல்வியைத் தேடித் தர வேண்டும் சேலம் மன்றம்.

சேலம் சிறந்ததோர் வழிகாட்டியிருக்கிறது. இந்த நல்வழியை, சென்னை மாநிலத்தில் உள்ள எல்லா நகராட்சி மன்றங்களும்

**(Municipalities)** அதுபோலவே நாட்டாட்சி மன்றங்களும் **(District Boards)** உடனடியாகப் பின்பற்ற வேண்டும்.

ஆரம்பக் கல்வி விரைவில் பரவ வேண்டுமானால் நாம் செய்து முடிக்க வேண்டிய பல வேலைகளில் இதுவும் ஒன்றாகும்.

இந்த உண்மையை ஐயம் திரிபற அறிந்திருக்கிற காரணத்தால் தான், சென்னை அரசாங்கத்தார், சில மாதங்களுக்கு முன்னால், நகராட்சி மன்றங்களும் நாட்டாட்சி மன்றங்களும், ஆரம்பப் பள்ளி களைப் போதுமான அளவு தொடங்குவதில்தான் தங்கள் முதல் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்றும், அப்படித் தொடங்கிய பிறகும் பணம் ஏதாவது மிச்சம் இருந்தால்தான் உயர்நிலைப் பள்ளி களைத் தொடங்கலாம் என்றும் தெரிவித்து சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தனர்.

இதே நேரத்தில், ஆரம்பக்கல்வி—உயர்நிலைக் கல்வி—இரண் டையும் பற்றிய மற்றுமோர் பிரச்சினையையும் இங்கே நாம் எழுப்ப விரும்புகிறோம்.

ஆரம்பப் பள்ளிகளில் ஒன்று முதல் எட்டாவது வரையில் வகுப்புக்கள் இருக்கின்றன. ஆரம்பப் பள்ளி ஒன்றில் எட்டாவது வகுப்பைப் படித்து முடித்த ஒரு மாணவன், அந்தப் பள்ளிக்கூடத் தினர் அளிக்கும் நற்சான்று இதழோடு, உயர்நிலைப் பள்ளி ஒன்றிற் குச் சென்றால், அங்கே அவனை, உடனடியாக ஒன்பதாவது வகுப்பில் சேர்த்துக் கொள்வதில்லை. அதற்கு மாறாக, அவனுடைய தகுதி யைச் சோதிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, ஏதோ ஒரு பரீட்சையை வைத்து, ஒன்று அல்லது இரண்டு வகுப்புகள் குறை வாகவே அவன் சேர்த்துக் கொள்ளப்படுகிறான். இதன் விளைவாக, ஆரம்பப் பள்ளி ஒன்றில் எட்டாவது வரை வெற்றியுடன் படித்து முடித்த ஒரு மாணவன், மீண்டும் ஒரு முறை, ஓர் உயர்நிலைப் பள்ளியில், எட்டாவது வகுப்பையோ, அல்லது சில சமயங்களில், ஏழு—எட்டு ஆகிய இரண்டு வகுப்புகளையுமோ படித்துத் தீர வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறான்.

இப்படிப்பட்ட ஒரு விசித்திரமான நிலை இந்த நாட்டில் நிலவு வதை சகிக்க முடியாத ஒரு கொடுமை என்றே நாம் கருதுகிறோம்.

**மாணவர்கள் – பெற்றோர்கள் – ஆரம்பப் பள்ளிகள் – உயர்நிலைப் பள்ளிகள்—அரசாங்கம் – சமுதாயம்**

ஆகிய அனைவருக்குமே, இந்த அக்கிரமமான நடைமுறையால், அளவற்ற நஷ்டமே தவிர நன்மை துளியும் இல்லை.

மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் ஏற்கெனவே படித்துத் தேர்ச்சி பெற்றுவிட்ட வகுப்புகளிலேயே மீண்டும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளை வீணுக்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகிருர்கள். இதனுல் கல்வியறிவை அடைவதில் அவர்களுக்கிருக்கிற ஆர்வமும் பற்றுதலும் குறைந்து, சோர்வும் சோகமும் உருவாகிவிடுகின்றன. அரைத்த மாவையே மீண்டும் மீண்டும் அரைப்பது என்ருல், அதனை, எவர்தான் விரும்ப இயலும்?

பெற்ரோர்களுக்கோ, இந்த ஏற்பாட்டால், பண நஷ்டம் ஒரு புறமும், மன முறிவு மற்ருேர் புறமுமாக உண்டாகிவிடுகிறது. படித்த வகுப்புகளிலேயே பிள்ளைகள் மீண்டும் படிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுவதால், பெற்ருேர்கள், ஒரே வகுப்பிற்காக இரண்டு முறை, புத்தகங்களுக்காகவும் பள்ளிச் சம்பளத்திற்காகவும் தங்கள் அரும் பணத்தை இழக்கவேண்டிய கொடுமைக்கு உள்ளாகிருர்கள். "அங்கே ஒரு முறை ஏழு–எட்டு வகுப்புகள்! இங்கே ஒரு முறை ஏழு–எட்டு வகுப்புகள்! அங்கே ஒரு தரம் செலவு — இங்கே ஒரு தரம் செலவு! செச்சே! இதைவிட, பையனை, பள்ளிக்கூடத்தை விட்டே நிறுத்திஞல்தான் என்ன? யாரால் முடியும் இந்த வேதனையைத் தாங்க?" என்கிற மனமுறிவு, இந்த நிலையில், பெற்ருேர்களுக்கு ஏற்படுமானுல், அது கண்டு நாம் வியப்படைவதற்கில்லை.

ஆரம்பப் பள்ளிகளுக்கோ, இந்த நிலை, தாங்க முடியாத அவமானத்தை உண்டாக்குவதாக இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் எட்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றவன், சங்கடம் எதுவுமின்றி, எந்த உயர் நிலைப் பள்ளியில் வேண்டுமானுலும், ஒன்பதாவது வகுப்பில் சேர்ந்துவிடுகிருன். ஆனுல், ஆரம்பப் பள்ளிகளில் எட்டாவது தேர்ச்சி பெற்றவனே எந்த உயர்நிலைப்பள்ளியிலும் அப்படிச் சேர முடிவதில்லை. இதனுல், ஆரம்பப் பள்ளிகளில் உள்ள எட்டாவது வகுப்பு, உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள எட்டாவது வகுப்பைவிட, **தரத்தில் மட்டமானது** என்கிற ஓர் தவருன உணர்ச்சி, பெற்ருேர்களிடமும் சரி, மாணவர்களிடமும் சரி, உண்டாகிவிடுகிறது. இதனுல் ஆரம்பப் பள்ளிகளுக்கு உண்டாகிற பழிச்சொல்லும் நிலையில் தாழ்வும் ஒருபுறம் இருக்க, இருவகை எட்டாவது வகுப்புகளுக்கிடையே, இந்த ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருந்தால் ஆரம்பப் பள்ளிகளில் சேர்ந்திருக்கக்கூடிய பல பிள்ளைகள், இப்போது, இந்த ஏற்றத் தாழ்வு இருக்கிற ஒரே காரணத்தால், ஆரம்பப் பள்ளிகளை ஒதுக்கிவிட்டு, உயர்நிலைப் பள்ளிகளில் சேர்ந்துவிடுகின்றனர். "இங்கே ஒரு முறை ஏழு–எட்டு வகுப்புகளைப் படித்து விட்டு அங்கே ஒரு முறை மீண்டும் படிப்பானேன்? ஒரு வழியாக அங்கேயே ஆருவது அல்லது ஏழாவது வகுப்பில் சேர்ந்து விட்டால்

இந்தத் தொல்லை இருக்காதே" என்கிற எண்ணம், எளிதில் ஏற்பட்டு விடுகிறது பெற்றோர்களிடம். ஏற்படத்தானே செய்யும் இன்றைய இழிநிலை நீடிக்கிற வரையில்! இதனால், ஆரம்பப் பள்ளிகளின் வளர்ச்சி எந்த அளவு பாதிக்கப்படுகிறது என்பதை நாம் விளக்கிக் கூற வேண்டிய அவசியமில்லை. எவரும் தெரிந்துகொள்ளக்கூடிய எளிய உண்மை அது.

உயர்நிலைப்பள்ளிகளின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் சரி, ஏற்கெனவே எட்டாவது பயின்ற மாணவனை மீண்டும் அதே வகுப்பில் படிக்க வைப்பது ஒருநாளும் உயர்நிலைப் பள்ளிகளுக்குப் பெருமைதரும் காரியமாகாது.

அரசாங்கத்திற்கும், சமுதாயத்திற்குமோ, இந்த விபரீத ஏற்பாட்டால், பணநஷ்டம் — கால நஷ்டம் — உழைப்பு நஷ்டம் அத்தனையும் ஏற்படுகின்றன.

எனவே, அரசாங்கத்தார், இந்த விசித்திரம் மிகுந்த விபரீத ஏற்றத் தாழ்விற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே ஒரு முற்றுப் புள்ளியை வைத்திருக்கவேண்டும்.

ஆனால் அவர்களோ, இந்த அக்கிரமமான ஏற்பாட்டைஒழித்துக் கட்டுவதற்குப் பதிலாக மேலும் அதனை வற்புறுத்தத் தொடங்கி விட்டனர்.

ஆரம்பப் பள்ளிகளில் எட்டாவது வகுப்பைப் படித்து முடித்த மாணவர்களுக்கு, E. S. L. C. என்கிற பெயருடைய பொதுப் பரீட்சை ஒன்றை வைத்திருக்கின்றனர் அரசாங்கத்தார். ஆனால், இதே வகையான பரீட்சை, உயர்நிலைப் பள்ளிகளில் எட்டாவது வகுப்பைப் படித்த மாணவனுக்குக் கிடையாது. இருவகை எட்டாவது வகுப்புகளுக்குமிடையே ஏற்றத்தாழ்வை வலியுறுத்துகிற செயல்தானே இது?

சென்னை மாநிலத்தின் கல்வி நிலை சீர்பட வேண்டுமானால், இந்த ஏற்றத்தாழ்வு முறை உடனடியாக ஒழிக்கப்படவேண்டும்.

சமுதாயத்தில் இருந்து வருகிற மேல் ஜாதி கீழ் ஜாதி என்கிற கேடுகள் தொலைய வேண்டியது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமாகும் பள்ளிக்கூடங்களுக்கு இடையே இருக்கிற இந்த ஜாதிமுறை தொலைய வேண்டியதும்.

உயர்நிலைப் பள்ளி என்றால், அது ஏதோ ஓர் உயர் ஜாதி என்பதுபோலவும், ஆரம்பப் பள்ளி என்றால் அது ஏதோ ஒரு தாழ்த்தப்பட்ட ஜாதி என்பது போலவும் ஒரு நிலை, இப்போது, மேற்படி ஏற்பாட்டின் காரணமாக, கல்வி உலகத்தில் இருந்து வருகிறது.

கல்வி உலகத்திலுமா வர்ணாஸ்ரம தர்மம்?

கூடாது அந்த அக்கிரமம். ஆகாது அந்தக் கொடுமை. ஒழிந்தே தீரவேண்டும் அந்த உதவாக்கரை ஏற்பாடு.

இருவகைப் பள்ளிகளுக்குமிடையே இப்போது இருந்து வருகிற ஏற்றத்தாழ்வு தொலைய வேண்டுமானால், கீழ்க்கண்ட திட்டங்களை அரசாங்கத்தார் மேற்கொள்ள வேண்டும்.

1. ஒன்றுமுதல் எட்டாவது வரையுள்ள வகுப்புகளை ஆரம்பப் பள்ளிகள் மட்டும்தான் நடத்த வேண்டுமென்றும், உயர்நிலைப்பள்ளிகள், ஒன்பதாவது — பத்தாவது — எஸ். எஸ். எல். சி. ஆகிய மூன்று வகுப்புகளை மட்டும்தான் நடத்தலாம் என்றும் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

2. அத்தகு ஏற்பாடு சாத்தியமற்றது என்று அரசாங்கம் கருதுமானால், ஒன்று முதல் எட்டாவது வரையுள்ள வகுப்புகளை உயர்நிலைப் பள்ளிகளும் நடத்தலாம் என்று அனுமதிக்கட்டும். ஆனால், மேற்படி வகுப்புகளை, உயர்நிலைப்பள்ளிகள் நடத்தினாலும் சரி, ஆரம்பப் பள்ளிகள் நடத்தினாலும் சரி, அவற்றிற்கிடையே துளியளவும் வேறுபாடு கிடையாது என்பதும், ஆரம்பப் பள்ளிகளில் எட்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவன், புதிய பரீட்சை முதலிய சங்கடம் எதுவுமின்றி உயர்நிலைப் பள்ளிகளின் ஒன்பதாவது வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதும், அரசாங்கத்தால், தெளிவாக அறிவிக்கப்பட்டுவிட வேண்டும்.

3. E.S.L.C. பரீட்சையைப் பொறுத்த வரையில், ஒன்று, அரசாங்கத்தார் அதனை ஒழித்துக்கட்டிவிட வேண்டும். அல்லது அந்தப் பரீட்சையால் ஏதாவது பயனிருக்கிறது என்று அரசாங்கம் கருதுமானால், அந்தப் பரீட்சை, உயர்நிலைப் பள்ளிகளில் மூன்றாவது படிவம் பயில்கின்ற மாணவர்களுக்கும் ஏற்படுத்தப்படவேண்டும்.

4. உயர்நிலைப் பள்ளிகளில் ஒன்று முதல் மூன்றாவது படிவம் வரை உள்ள வகுப்புகளுக்கும், ஆரம்பப் பள்ளிகளில் அதுபோலவே உள்ள வகுப்புகளுக்கும் தரப்பட்டிருக்கிற பாடதிட்டத்தில் எத்தகைய வேறுபாடும் இருக்கக் கூடாது. இருவகைப் பள்ளிகளிலும் ஒரே வகையான பாடதிட்டம்தான் அமுலில் இருக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதானால், ஒன்று முதல் எட்டாவது வரையுள்ள வகுப்புகளை எந்தப் பள்ளிகள் நடத்தினாலும் சரி, அவற்றிற்கிடையே துளியும் வேறுபாடு கிடையாது என்று தெள்ளத் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும்.

இப்படிச் செய்தால்தான், இப்படிச் செய்யப்பட்டதற்கு அப்புறந்தான், ஆரம்பக் கல்வி, இந்த நாட்டில் விரைந்து பரவ முடியும். ஆனால் இதனைச் செய்யுமா அரசாங்கம்?

செய்வதுதான் முறை. ஆனால் செய்யுமா?

# மேதைகள்

பெரிய மனிதர்களிடம் இருக்க வேண்டிய அறிவாற்றல்கள், சின்னஞ்சிறு குழந்தைகளிடம் இருந்தால், அதிலும் அவ்வறிவாற்றல்கள் மிகமிக வியக்கத்தக்கவையாயிருந்தால் அக்குழந்தைகள் உலகில் ஒரு விந்தையாகவே விளங்கும் குழவிப் பருவத்திலேயே இத்தகையவியக்கத்தக்க பேரறிவு படைத்து விளங்கும் குழந்தைகளைக் காண்கின்ற பலர் திகிலே அடைகின்றனர். மற்றவர்கள் மீளமுடியாதவியப்புக்கு ஆளாகி விடுகின்றனர்.

சிறு பருவத்திலேயே காணப்படும் பேரறிவு பழந் தமிழ் இலக்கியங்களில் "**சிறு முதுக் குறைமை**" என வழங்கப்படுகிறது. சிறு முதுக் குறைமை வாய்ந்த குழந்தைகள் ஒவ்வொரு தலைமுறையிலும் தோன்றுகின்றனர். கலையிலும் அறிவியலிலும் (முக்கியமாகக் கணிதத்தில்) பிறபுனைவுத் துறைகளிலும் இக்குழந்தைகள் தம் அகவைக்கு (வயதுக்கு) அப்பாற்பட்ட அறிவு வன்மை பெற்றிருப்பது கண்டு உலகம் திகைக்கிறது. எனினும் இக்குழந்தைகளில் எல்லோருமே கட்டிளமைக் காலம்வரை வாழ்ந்து அறிவொளி பரப்புகின்றனர் என்று சொல்லமுடியாது.

## ஆயிரத்தில் ஒன்று

சிறு பருவத்தில் காணப்படுகிற இந்தப் பேராற்றல் வழி வழியாகக் குடும்பத் தொடர்பிலிருந்து பிறக்கிறதென்று அறிஞர் சிலர் கருதுகின்றனர். ஆயினும் இந்தப்பேரறிவு பெற்றோர்களிடமிருந்து அவர்களுடைய குழந்தைகளை யடைகிற தென்பது இதன் பொருளாகி விடாது. இது பல தலைமுறைக்கு முந்திய மூதாதையர்களில் ஒருவரிடமிருந்து பெறப்பட்டதாகவுமிருக்கலாம். உலகில் பிறக்கும் ஒவ்வோர் ஆயிரம் குழந்தைகளிலும் ஒரு குழந்தைதான் பேரறிவு படைத்ததாக விளங்குமென அறிஞர்கள் கணிக்கின்றனர்.

இதில் மற்றோர் உண்மையும் குறிப்பிடத்தக்கதாகும். சிறு பருவத்தில் பேரறிவு படைத்தோராய் விளங்குவோர் நூற்றுக்கு 99 விழுக்காடு ஆண்களாகவே இருக்கின்றனர் என்பது தான் அது.

## 7வது அகவையில் உலக வரலாறு

இனி யார் யார் இத்தகைய பேரறிவுடன் விளங்கினர் என்பதைப் பார்ப்போம். ஆங்கிலேயரான லார்டு மெக்காலே என்பவர் தமது 7வது அகவையில் சிந்தனை மிக்க உலக வரலாறு ஒன்றை எழுதினார். இதைக்கேட்டஅவருடைய பெற்றோர்கள் திடுக்கிட்டு விட்டனர், அவர் இதற்கும் குறைந்த அகவையிலேயே (வயதிலேயே) சிறுவர் தாளிகை (பத்திரிகை) ஒன்றுக்கு ஆசிரிய

ராக இருந்தார். தமது 8-வது அகவையில் மலபாரைச் சேர்ந்த புறச்சமய மக்களைக் கிறிஸ்துவ மதத்தவர்களாக்குவதற்காகக் கிறிஸ்துவமதம் என்ற ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதினார்.

புத்தகப் படிப்பில் அவருக்குத் தொல்லை ஏற்பட்டதேயில்லை. அவர் தமது வாழ்நாள் நெடுகலும் கற்று வந்த எல்லாப்பொருளும் அவருக்கு மனப்பாடமாகி விட்டன. அவர் படித்தது செய்யுளாயிருந்தாலும் சரி தாளிகை (பத்திரிகை)ச் செய்தியாயிருந்தாலும் சரி ஆராய்ச்சியாயிருந்தாலும் சரி அத்தனையும் தமது நினைவிலிருந்தே ஒரு தப்புக்கூட இல்லாமல் நன்கு ஒப்பித்திடுவார். அவ்வளவு தொலைவு இவற்றை மனப் பாடம் பண்ணியிருந்தார், படித்தவுடன் மட்டுமின்றி படித்துப் பல்லாண்டுகளான பின்னரும் கூட இவ்வாறு ஒப்பிப்பது அவருக்கு வழக்கமாயிருந்தது.

## லார்டு பைரன்

டீன் ஸ்விப்ட் என்பார் தமக்கு 3 அகவை ஆவதற்குள்ளேயே கிறிஸ்துவ மறையாகிய விவிலிய நூலின் எந்தப் பகுதியையும் படித்துவிடக் கூடியவராய் இருந்தார். லார்டு பைரன் என்பவர் தமது 5வது அகவையிலிருந்தே ஆங்கில இலக்கியமனைத்தையும் தீரக் கற்று வந்தார். தமது பிற்கால வாழ்க்கையில் பட்டாங்கு நூல் போறிஞராக (தத்துவ மேதை) விளங்கிய ஜான் ஸ்டுவர்ட் மில் என்பவர் தாய்ப் பால் குடிக்கும் குழவியாயிருந்த காலத்திலேயே புத்தகம் படிக்கத் தொடங்கி யிருப்பார் என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் தமக்கு 3 அகவை ஆவதற்குள் அவர் பெற்றிருந்த நூலறிவு அவ்வளவு பரந்ததாயிருந்தது. அவர் தமது 3வது அகவையிலேயே கிரேக்க மொழியைக் கற்கத் தொடங்கிவிட்டார்.

## டாக்டர் ஜான்சன்

ஆங்கில இலக்கிய மேதையாகிய டாக்டர் ஜான்சன், தமது 3வது அகவையிலேயே எதையும் இலகுவாகப்படித்து வந்தார். அவர் 'குறு குறு நடந்து சிறு கை நீட்டும் தளர் நடைக்' குழந்தையாயிருந்த போதே அவரது அன்னையார் நாள்தோறும் அவரிடம் இறைவழிபாட்டுப் புத்தகங்களைக் கொடுத்து அதில் அன்றைக்கு உரிய பகுதியைக் காட்டி, 'தம்பி, இந்த நீ இன்று பாடம் பண்ணிவிட வேண்டும்' என்று சொல்லுவார். அவர் இவ்வாறு சொல்லிவிட்டு மாடிக்குச் செல்லுவார். ஆனல் அவர் இரண்டாவது மாடியை அடைவதற்கு முன்னரே ஜான்சன் அவரைப் பின் தொடர்ந்து ஓடி அம்மா, அம்மா என்று கூப்பிட்டு அந்தப் பகுதி முழுவதையும் அப்படியே தப்பில்லாமல் ஒப்பித்து விடுவார்.

## ஹென்றி பிராட்ஷா

ஹென்றி பிராட்ஷா என்பவரும் தமது 3வது அகவையி

லேயே (வயதிலேயே) எதையும் நன்ருகப் படித்து வந்தார். அவர் ஈட்டன் என்ற ஊரில் தாம் ஒரு மாணவனுக இருந்த போது தமது நூல் நிலையத்தில் 500-க்கு மேற்பட்ட நூல்களை வைத்திருந் தார். தாம் சிறுவனுயிருந்த போதே சாசர், ஸ்பென்சர், டென்னிசன் ஆகியோர் உள்ளிட்ட ஆங்கிலத் தொல்லாசிரியர்களின் நூல்கள் அனைத்தையும் ஓராண்டில் கற்று விட்டார்.

## வில்லியம் சிடிஸ்

வில்லியம் சிடிஸ் என்பவர் இவரினும் வியக்கத்தக்கவராயிருந் தார். வில்லியம் தமது 2-வது அகவையிலேயே புத்தகம் படிக்கத் தொடங்கி விட்டார். தமது 11-வது அகவையில் பேரறிஞர். களான பேராசிரியர்களின் கூட்டமொன்றில் 4-வது கன அளவு பற்றிச் சொற்பொழிவே ஆற்றி விட்டார்! ஆனுல் சிறு பருவத்தில் அவரிடம் காணப்பட்ட இந்த அறிவொளி பிற்காலத்தில் மங்கி விட்டது. பிற்பாடு அவர் ஒரு கடையில் வாரமொன்றுக்கு 5 பவுன் சம்பளத்தில் கணக்காராக வேலை பார்த்தார். தமது 46வது அகவையில் "பெயரில்லா பூச்சியாக" உயிர் துறந்தார்.

## கிரீன் வுட்

ஆர்தர் கிரீன் வுட் என்ற அமெரிக்க அறிஞர் 12 மாதக் குழந்தையாயிருந்தபோதே அரிவரியைக் கற்றுக் கொண்டு விட்டார். அவர் தமது 12 வது அகவையில் பூதநூல் மேதை (பௌதிக நூல் நிபுணர்) என்ற பட்டம் பெற்ருர்.

## வியத்தகு குழந்தை

ஆனுல் பண்டைய இலக்கியங்களில் பேசப்படுகிற கிறிஸ்டியன் ஹெய்ன்கர் என்ற ஜெர்மன் ஆண் குழந்தையின் வரலாறு இதைவிட வியக்கத்தக்கதாயிருக்கிறது. இது நம்பொணுததாகவேயிருக்கிறது. இக் குழந்தை 1771-ம் ஆண்டு லியூபெக் என்ற ஊரில் பிறந்தது. இந்தக் குழந்தை தான் பிறந்த சில மணி நேரத்திற்குள்ளேயே பேசி விட்டதென்றும் தமது 2 வது அகவையில் விவிலிய நூலைக் கரைத்துக் குடித்திருந்ததென்றும் தனது 3 வது அகவையில் லத்தீன், கிரேக்கம் பிரஞ்சு ஆகிய மொழிகளையும் பூகோளம் வரலாறு ஆகியவற்றையும் நன்கறிந்திருந்ததென்றும் இலக்கியங்கள் கூறுகின்றன. இக் குழந்தை, இவற்றையெல்லாம் மிஞ்சத்தக்க முறையில், தான் இறக்கப்போகும் காலத்தையும் முன்னதாகவே உணர்த்தியிருந்தது. அதன்படியே தனது 4 வது அகவையில் உயிர் துறந்தது. இது பிற குழந்தைகளின் வியக்கத்தக்க நிலைமைகளையெல்லாம் தூசியாக்கி விட்டதென்பதில் ஐயமேது?

## ஜான் ரஸ்கின்

ஆங்கிலப் பெரியாராகிய ஜான் ரஸ்கின் என்பவர் தமது 5 வது

அகவையிலேயே புத்தகப் பூச்சியாக இருந்தார். புத்தகப் படிப்பு, குழவிப் பருவத்திலேயே அவருக்குப் புகட்டப்பட்டிருந்தது. அவர் தமக்கு 6 அகவை நிறைவதற்குள்ளேயே ஷேக்ஸ்பியர், வால்டர் ஸ்காட், பைரன் ஆகியோருடைய நூல்களையும் பல இலக்கியங்களையும் கற்றுவிட்டார். முன்னைய பிரிட்டிஷ் முதன் மந்திரிகளில் ஒருவரான டிஸ்ரயேலி, தமது இளம் பருவத்திலேயே ஆங்கில இலக்கியக் கடல் முழுவதையும் தமது உள்ளத்திலே அடக்கி வைத்திருந்தார் அதனால் 'ஒரு நூல் நிலையத்தில் பிறந்தவர்' என்ற புகழ் அவருக்கு ஏற்பட்டிருந்தது.

சர் வால்டர் ஸ்காட் தாம் சின்னஞ் சிறு குழந்தையாயிருந்தபோதே ஷேக்ஸ் பியரின் பனுவல்கள் அனைத்தையும் சுவைக்கத் தொடங்கி விட்டார்.

## இசை வல்லுநர்

இசைத் துறையிலும் இத்தகைய விந்தைகள் நிகழ்ந்திருக்கின்றன. ஜெர்மனியில் ஹாண்டல் என்பவர் தமக்கு 5 அகவை ஆவதற்குள்ளேயே இசைக்கருவிகளை இயக்கினார். பாட்டுகள் இயற்றிப் பெரும் புகழ் பெற்றார். மொசார்ட் என்பவர் தமது 6வது அகவையிலேயே இசையரங்குகள் (சங்கீதக் கச்சேரி) நடத்த ஐரோப்பாவில் சுற்றுச் செலவு (பிரயாணம்) செய்யத் தொடங்கி விட்டார். ஆனால் இத்தகைய அறிவொளி விரைவில் அணைந்துவிடுகிறது என்பதற்கு இவர் நல்ல எடுத்துக் காட்டாக இருந்தார், இவர் தமது 35 வது அகவையில் உயிர் துறந்தார்.

சோப்பின், ஹேடின், ரிச்சார்டு ஸ்டிராஸ் போன்றோரும் தங்கள் குழந்தைப் பருவத்திலேயே வியக்கத்தக்க இசைப் புலமை பெற்றிருந்தனர்.

## ஏகுதி மெனுஹின்

இக் காலத்தே பெரும் புகழுடன் விளங்கி வருகிற கின்னரி (பிடில்) வல்லுநரான ஏகுதி மெனுஹின் தமது 3 வது அகவையிலேயே கின்னரி இசைக்கத் தொடங்கி விட்டார். சர் லாண்டன் ரொனால்டு என்பவர் தாம் பேசக் கற்றுக்கொள்ளு முன்னரே பியானோ இசைக்கத் தொடங்கிவிட்டார்.

## கணித வல்லுநர்

கணிதத் துறையில் குழந்தைகளிடம் காணப்பட்ட பேரறிவு இவையனைத்தையும்விட வியக்கத்தக்கதாக இருக்கிறது. சிலர், தாங்கள் குழந்தைகளாக இருந்தபோதே எவ்வளவு பெரிய கணக்கையும் சில நிமிடத்திற்குள் மனக்கணக்காகச் செய்து விடையளிப்பதில் பேராற்றல் படைத்தவர்களாக இருந்திருக்கின்றனர்.

ஜார்ஜ் பிடர் என்பவர் 2 அகவை நிரம்பிய குழந்தையாயிருந்தபோது அவரிடம் ஒரு கணக்கைச் சொல்லி விடை கேட்டனர். ஆண்டொன்றுக்கு

$4\frac{1}{2}$ விகித வட்டியில் 4444 பவுனுக்கு 4444 நாளைக்கு வட்டி எவ்வளவு என்பதுதான் கணக்கு. ஜார்ஜ் இந்த கணக்கிற்கு 2 நிமிடத்திற்குள் விடை சொல்லிவிட்டார்; ட்ரூமன்சாபோர்டு என்பவர் தமக்கு 9 அகவை ஆவதற்கு முன்னரே கணிதப் பேரறிஞராகி விட்டார். அவர் 10 அகவை (வயது)ச் சிறுவனாயிருந்தபோது அவரிடம் ஒரு கணக்கிற்கு விடை கேட்டனர். 365 என்ற எண்ணை 365—ஆல் பெருக்கி பெருக்கி வந்த தொகையை மற்றொரு முறை 365—ஆல் பெருக்கி இப்படியே மேலும் 3 முறை ஒவ்வொரு முறையும் பெருக்கி வந்த தொகையை 365—ஆல் பெருக்க வேண்டும்என்பதுதான் கணக்கு. இதைக் கேட்ட ட்ரூமன், தமது அறை முழுதும் பம்பரம்போல் சுழன்று தாங்கொணாத வேதனைக்கு ஆளானவர் போலாகி, இறுதியில் ஒரு நிமிடத்தில் சரியான விடையைச் சொல்லிவிட்டார்.

(தமிழ்முரசு)

---


## "ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

**94–95, புதுத் தெரு, மண்ணடி சென்னை—1.**

| | |
|---|---|
| **மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்** | (ஆங்கிலம்) 100 ரூ. 2–8 |
| **ரிகார்ட் ஷீட்டுகள்** | (ஆங்கிலம்) 100 ரூ. 2–0 |
| **பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள்** | (ஆங்கிலம்) 100 ரூ. 2–0 |
| **பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள்** | (ஆங்கிலம்) 100 ரூ. 1–0 |
| **வருடாந்திர பிராவிடண்ட் பண்டு (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்)** | (ஆங்கிலம்) 100 ரூ. 2–0 |

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# உலகைத் திருத்திய உத்தமன் டிக்கன்ஸ்

(ஆர். செல்வமணி பி. ஏ.)

"எழுத்தாளன் வறுமையின் சின்னம்; வேதனையின் இருப்பிடம். அவன் வாழ்வில் மகிழ்ச்சித்தென்றல் வீசாது. இன்ப நாதம் ஒலிக்காது. வாழ்நாள் முழுதும் வறுமைதான் அவனை அணைத்துக்கொண்டிருக்கும்"— எழுத்தாளனுக்கு உரைக்கப்படும் இலக்கணம், இது. இந்த இலக்கணத்திற்கு உட்பட்டவன் தான், எழுத்தாளன்.

ஆனால், இந்த இலக்கணத்தை உடைத்தெறிந்து எழுத்தைக் கொண்டு பெருஞ் செல்வம் குவித்து பெருமிதவாழ்வு நடத்திய எழுத்தாளர்களுமிருந்திருக்கிறார்கள். அத்தகையவர்களின் பட்டியலில் இடம் பெறுபவர் தான் ஆங்கில மாதா உலகிற்குத் தந்த எழுத்துச் சிற்பி சார்லஸ் டிக்கன்ஸ்.

சார்லஸ் டிக்கன்ஸ் பிறக்கும் போதே பூமானின் மகனாகப் பிறக்கவில்லை. குடிசையிலே, வறுமை நெளிந்த ஓர் குடும்பத்திலே பிறந்தார்; அவர் தந்தை ஒரு சாதாரண குமாஸ்தா! பெயர் ஜான் டிக்கன்ஸ்!

குமாஸ்தாவின் வாழ்விலே குதூகல மழையா பொழியும்! குறைந்த ஊதியத்தைக்கொண்டு குடும்பத்தைநடத்தவே முடியாது திண்டாடினார் ஜான் டிக்கன்ஸ். ஏராளமான கடன் தொல்லை வேறு! வறுமை அவரைக் கட்டிக்கொண்டு பேய்ச்சிரிப்பு சிரித்தது! அதன் இரும்புப் பிடியிலே சிக்கிச் சிதைந்தார், ஜான் டிக்கன்ஸ்! எனவே இளம் வயதிலேயே சார்லஸ் டிக்கன்ஸ் வறுமை இன்னதென்பதை உணர்ந்து கொண்டார், தெளிவாக.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. சார்லசுக்குநான்காம் வயது நடந்து கொண்டிருந்தது. அப்போது அலுவலை முன்னிட்டு ஜான் டிக்கன்ஸ் குடும்பத்துடன் சேதம் என்ற ஊரிலே ஐந்தாண்டுகள் தங்க நேர்ந்தது. சேதம்— இயற்கையன்னை நடம் புரிந்த எழில் பூமி! மனதையள்ளும் மனோகரக் காட்சிகள் நிறைந்த கவர்ச்சியூர்! இவ்வூரின் இயற்கை எழில் சார்லசைக் கவர்ந்தது! அவர் இளம் உள்ளத்திலே கலையுணர்வை விளைத்து வளர்த்தது!

சேதமை அடுத்து இரோவ்சந்த் என்னும் சிற்றூர் இருந்தது. இந்த இரு ஊர்களையும் இணைத்தது, ஒரு அழகிய சாலை. இந்தச் சாலையிலே மாலை வேளைகளிலே சார்லசும் அவர் தந்தையும் உலவச் செல்வதுண்டு — சாலையின் இடையிலே சற்று ஒதுப்புறமாக மனோகரமான ஒரு மாளிகை கம்

பீரமாக நின்றுகொண்டிருந்தது. 'கேட்ஷில் பிளேஸ்' என்று அந்த மாளிகைக்குப் பெயர். அழகை அள்ளி வீசிக்கொண்டிருந்த அந்தமாளிகையைக்காணும்தோறும் சார்லஸ் சொக்கிப் போவார்! தன் தந்தை பக்கத்தில் நின்றிருப்பதையும் மறந்து அந்த மாளிகையின் எழிலை ரசிக்கத் தொடங்கிவிடுவார்!' "ஆஹா, இந்த மாளிகையிலே வாழ்ந்தால் எவ்வளவு இன்பமாயிருக்கும்!" என்ற எண்ணம் அவர் இளம் உள்ளத்தில் அலைமோதும்.

ஜான் டிக்கன்ஸ் தன் மைந்தனின் உள்ளத்தில் அலைமோதும் எண்ணத்தை ஊகித்துக்கொள்வார். வேதனை கலந்த பெருமூச்சொன்றுதான் அவரது உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெடித்துச் சிதறும். வேறென்னசெய்ய இயலும், அவரால்? அவரென்ன பணத்தோடு விளையாடும் சீமானா. மாளிகையை விலைக்கு வாங்கி மகனுக்கு மகிழ்ச்சி தர? அவர் தான் அன்னக் காவடியாயிற்றே! என்றாலும் ஜான்டிக்கன்ஸ் ஒரு நாள் சார்லஸிடம் சொன்னார்:— "தம்பி, இந்த மாளிகையிலே வாழ நீ யட்டற்றமோகம் கொண்டிருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். என்றால் உன்னை இங்கு வாழவைக்க முடியாது. ஆனால் நீ முயன்றால் நிச்சயமாக இந்த மாளிகையில் வாழலாம். அதற்கு நீ கடினமாக உழைக்க வேண்டும் அந்த உழைப்பு உனக்கு ஏராளமான பணத்தைப் பெற்றுத் தரும். அதைக் கொண்டு இந்த மாளிகையை நீ வாங்கிவிடலாம். கடினமான உழைப்பு இந்த மாளிகையை மட்டுமல்ல, வேறு பல வெற்றிகளையும் தேடித்தரும்."

தந்தை ஜான்டிக்கன்சின் இந்த வார்த்தைகள் சார்லசின் உள்ளத்தில் ஆழப்பதிந்தன. அவரது செவிகளில் எப்போதும் ரீங்கார மிட்டுக்கொண்டேயிருந்தன. தந்தையின் இந்த மணிவாசகத்தை முன்வைத்து கடின உழைப்பைக் கொண்டு வாழ்வில் முன்னேறத் தொடங்கினார் சார்லஸ்டிக்கன்ஸ்.

குடும்பத்தில் வறுமைச் சூறாவளி வீசிற்று! இதனால் பிற்காலத்தில் கருத்துப் புதையல்களை வாரி வழங்கிய சார்லஸ்டிக்கன்ஸ் இளம் வயதிலே கல்விச்சாலை சென்று அறிவுத் தென்றலை ரசிக்கவில்லை-ரசிக்க முடியவில்லை. குடும்பக் கஷ்டத்தைக் குறைக்க அவர் இளம்வயதிலேயே பணியாற்றத் தொடங்கினார்! ஓயாது உழைத்தார்! இக்கடின உழைப்பு ஓரளவு ஊதியத்தைத்தேடித் தந்தது. குடும்பத்தின் தொல்லைகளை ஓரளவுக்குத் தகர்த்தது. வறுமையின் பிடி தளர்ந்து கொஞ்சம் பணவசதி ஏற்படவே ஜான்டிக்கன்ஸ், சார்லஸைப் பள்ளிக்கு அனுப்பினார், கல்விபயில. ஆனால் சார்லஸ் பள்ளியில் பயின்றது இரண்டே ஆண்டுகள் தாம்! மேலும் பயில வேண்டுமென்று துடித்தார் டிக்கன்ஸ்! ஆனால் அது இயலவில்லை! காரணம், பழையபடி அவர் குடும்பத்

திலே வறுமைச் சூறாவளி வீசத் தொடங்கிவிட்டதுதான்!

எனவே பள்ளியை விட்டு விலகிய சார்லஸ் ஒரு வழக்கறிஞரின் அலுவலகத்திலே சில காலம் கணக்காயனுகவேலைபார்த்தார். ஆனல், இந்த வேலை அவர் இதயத்தில் இன்பத்தைப் பாய்ச்சவில்லை. இளமையிலிருந்தே 'எழுத்தாளனுக வேண்டும்' என்ற ஆர்வம் அவரது உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்தது. காலப் போக்கிலே இந்த ஆசை அசைக்க முடியாத அடிப்படையை பெற்று விட்டது. இதனுல் கணக்காயன் வேலையிலே அவர் நாட்டம் பதியவில்லை. எனவே இந்த வேலையை உதறிவிட்டு எழுத்துலகில் அடியெடுத்து வைத்தார், சார்லஸ் டிக்கன்ஸ். "எண்ணற்ற சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதிக் குவிக்கவேண்டும், பெரும் எழுத்தாளன் என்று புகழ்பெற வேண்டும், எழுத்துக்களின் வழியாக மக்கள் இதயத்தில் புத்துணர்வைப் பூக்கச்செய்ய வேண்டும்" என்று விரும்பினுர், டிக்கன்ஸ். இந்த விருப்பம் நிறைவேற, தன் தந்தையின் மணிவாசகப்படி கடினமாக உழைக்கத் தொடங்கினுர், டிக்கன்ஸ்.

பத்திரிகை நிருபாக அவர் துவக்கத்தில் பணியாற்றத் தொடங்கினுர். ஓய்வு நேரங்களில் புகழ்பெற்ற எழுத்தாளர் பலரின் எழுத்துச் சிற்பங்களைப் படித்து வந்தார், அலுவல் தவிர்த்த மற்ற நேரமெல்லாம் இலக்கிய அறிவு பெறும் பணியிலேயே செலவிட்டார். இலவச வாசக சாலைகளுக்குச் சென்று ஓயாது படித்து எழுத்தோவியங்களை உருவாக்கும் முறைகளைத் தெளிவாகக் கற்றுக்கொண்டார். இதன் பின்புதான் அவர் தம் நாவல்களையும், சிறுகதைகளையும், கட்டுரைகளையும் தீட்டி, வழங்கத் தொடங்கினர், நாட்டுக்கு.

ஆரம்ப நாட்களில் சார்லஸ் டிக்கன்ஸ் அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் அருமையான கட்டுரைகளைத் தீட்டினுர். இதன்பின் முதன் முதலாக தலை சிறந்த நகைச்சுவை நாவலான 'பிக்விக் பேப்பர்ஸ்' — நாடெங்கும் வெற்றிமுரசு கொட்டிற்று! மக்களின் மகத்தான ஆதரவைப் பெற்றது! இந்த நூலுக்குப் பிறகு எண்ணற்ற நூல்களைத் தீட்டி நாட்டிலே நடமாடவிட்டார், டிக்கன்ஸ்.

ஓர் ஏழைச் சிறுவனின் அவதிகளை விளக்கும் 'ஆலிவர் ட்விஸ்ட்' பற்றியெறிந்த புரட்சித் தீயால் கருகிய பிரான்சின் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு பின்னப்பட்ட 'இரு நகரங்களின் கதை' போன்றவை அவரது அமரப்படைப்புகளிலே சில. மேலும் பல மகோன்னத எழுத்தோவியங்களை டிக்கன்ஸ் எழுதிக்கொண்டேயிருந்தார். 1835-ம் ஆண்டில் அவர் எழுதத் தொடங்கினர்! 1870-ம் ஆண்டு

(33-ம் பக்கம் பார்க்க)

# வீட்டுப் படிப்பும் பெற்றோரும்

(தென்னாப்பிரிகா - டர்பன் — திரு. ச. மு. பிள்ளை அவர்கள்)

மக்களின் புத்தி விசாலிக்க, அவர்களுக்குக் கல்வி கற்பித்தல் அவசியமாகும். கல்வி கற்பித்தல் என்றால் பள்ளிக்கூடங்களில் படிக்கச் செய்வது மட்டுமன்று, பள்ளிப் படிப்பைக் காட்டிலும் வீட்டுப் படிப்பே முக்கியமாயும் நல்லறிவுக்கு மூலகாரணமாயும் அமைந்துள்ளது. "இளமையிற் கல்" என்றபடி, சிறு வயதில் நல்ல பழக்கங்களிருந்தாற்றான், அதைக் கொண்டு பள்ளியில் படிக்கும் படிப்பை நல்வழியில் உபயோகிக்கக் கூடிய நற்புத்தி ஏற்படும். இளம் பிள்ளைகளின் மனம் வெகு தீட்சணியமுள்ளதாயும் கண்டதையெல்லா முடனுக்குடன் கிரகிக்கக் கூடிய அரிய சக்தியுடையதாயு மிருக்கின்றது.

சிறு பிள்ளைகளின் மனத்தை புகைப்படமெடுக்கும் கருவிக்குச் சமதையாகக் கூறலாம். எதிரிலிருக்கும் உருவம் சிரித்த முகமாயிருப்பினும் கடுகடுக்கும் நோக்காயிருப்பினும், அதை அவ்விதமே கிரகிக்கும் அக்கருவி போல, பிள்ளைகளின் மனமானது உயர்வு தாழ்வு, நன்மை தீமை, உத்தமம், அதமம் என்ற பாகுபாடு சிறிதுமின்றி எல்லாவற்றையும் கிரகிக்கக் கூடிய சக்தி பெற்றுள்ளதென்பதைப் பெற்றோர்கள் நன்கறிந்து கொள்ளல் அவர்கள் பிள்ளைகளுக்கு உதவும் முதற் கடமையாம். எதைக் கண்டாலும் எதைக் கேட்டாலும் அவற்றையெல்லாம் கிரகித்துக் கொள்ளக் கூடிய இளம் பருவத்தில் பெற்றோர்கள் கவனக்குறைவாக இருந்து விடுவார்களாயின், பிறகு அப்பிள்ளைகள் எவ்வளவு தூரம் பள்ளிப் படிப்புப் படித்த போதிலும் அதனால் ஒரு சிறிதும் பயனேற்படமாட்டாதென்பது திண்ணம்.

இளம் பிள்ளைகளின் பாலிய லீலைகளைக் கண்டு களிக்கும் பெற்றோர்கள் அவர்களுக்கு நற்பழக்கங்களை கற்பித்துப் பாதுகாக்கும் பொறுப்பைக் கனவிலும் மறக்கலாகாது. மக்களுக்குச் சத்துரு மாதா பிதாக்கள் என்றதோர் முதுமொழியுண்டு. பிள்ளைகளின் மீதுள்ள ஆசையினாலும் பாசத்தாலும் பெற்றோரில் பலர் தமது முக்கிய கடமையை மறந்து விடுவதினாற்றான் உலகில் தீயகுணம், தீச்செயல் முதலியன பெருகி வருகின்றன. பிள்ளைகள் புத்திசாலிகளாகவும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் இருப்பதற்கும், அவிவேகிகளாகவும் தீயொழுக்கமுள்ளவர்களாகவும் இருப்பதற்கும் பெற்றோர்களே காரணமாயமைந்துள்ளார்கள்.

பிள்ளைகளைப் பெறுவதால் மட்டும் பெருமையில்லை. அவர்களை நல்லவர்களாகப் பழக்கி வளர்த்தால் மட்டுமே அத் தாய்தந்தையர் புகழ்ச்சிக்குரியவராவர். பெற்

றோர் என்று கூறுங்கால், தாய் தந்தை இருவர்களையும் அச்சொல் குறிப்பதாயினும், பிள்ளைகளுக்கு வீட்டுக் கல்வி போதிப்பவள் தாயே ஆவாள். ஆடவனுக்குப் பொருளீட்டுதல் ஒன்றே முக்கியக் கடமையாகும். மக்களைப் பரிபாலித்து அவர்களை நல்வழியில் ஆரோக்கிய திடதேகத்துடன் வளர்த்து நல்ல பிள்ளைகளாகுமாறு வளர்த்தல் தாயைச் சேர்ந்த கடமை என்பதை மறுக்க முடியாது. தான் பெற்றெடுத்த பிள்ளைகளுக்குச் சிறிய நோய் கண்டாலும் துடிதுடித்து இமை கொட்டாது கவனித்து, ஆகார நித்திரைகளையும் பொருட்படுத்தாது பாதுக்காக்கும் தன்மை தாயிடத்திலமைந்துள்ளது பேரல, மக்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பு தாய்க்கே உரியதாகும்.

பிள்ளை துஷ்டனென்றும் தீயனென்றும் பெயரெடுத்தால், தன் மகனுக்கும் தனக்கும் யாதொரு விதசம்பந்தமும் கிடையாதெனத் தகப்பன் பகிரங்கமாக விளம்பரமிடவும் துணிவான். ஆனால் பெற்ற தாய் மட்டும் தான் பெற்ற பிள்ளையைப் பிறர் கேட்க தூஷிக்கவே மாட்டாள். இவ்வளவு தூரம் பற்றுள்ள தாய் தன் பிள்ளைக்கு வீட்டுக் கல்வியைப் பழக்கத் தவறிவிடுவாளாயின், இவள் அப்பிள்ளையைச் சுமந்து பெற்றதும் தன் இரத்தத்தை யூட்டி வளர்த்ததும் வீணேயாம். பிள்ளைகளிடத்துள்ள பெரும் பற்றால் அவர்களுக்குத் தீக்குணங்களை உபதேசிக்கும் பொறுப்பையும் சில சமயம் தாய்மார்கள் ஏற்றுக் கொண்டு விடுகிறார்கள். காலால் உதை, முகத்தில் துப்பு, செருப்பாலடி என்ற சொற்களைக் கூறிச் சீராட்டும் தாய்மார் பலர். பிள்ளைகள் துடுக்காகப் பேசினாலும், பிற பிள்ளைகளை யடித்தாலும், உடனுக்குடன் கண்டிக்காது, இக்குற்றங்களைத் தம்மிடம் சொல்ல வருகிறவர்களையும் எதிர்த்துப் பேசி, தம் மக்கள் செய்தது சரியெனச் சாதிக்கும் தாய்மாருமுண்டு. பேரன்பால் தாம் செய்வது தீமையென்பதறியாமலே தம் மக்களின் நற்பழக்கங்களுக்கு இடையூறு விளைவிப்பாருமுளர்.

கற்பித்தல் என்பது இருவகைப்படும். ஒன்று வீட்டுக் கல்வி, மற்றொன்று பள்ளிக் கல்வி. முதன்முதலாயுள்ள வீட்டுக் கல்வி சரிவர அமையாது போனால் பள்ளிக் கல்வி பயனையளிக்கவேமாட்டாது. மத்திய காலத்தில் கிராம வாழ்க்கையிலிருந்த தாய்மார்களால் பிள்ளைகளின் தேகத்திடன் மிகச் சிறப்பாகப் பரிபாலிக்கப்பட்டு வந்தது. அக்குழந்தைகளின் வளர்ப்பு தரய்மார்களின் மேற்பார்வையிலேயே நடைபெற்றது.

நாகரிகம் மிக்க தற்காலத்தில் தான் பெற்ற பாலகனுக்குப் பாலூட்டி வளர்க்கக் கூடிய தன்மையையும் பல தாய்மார்கள் கொண்டிருக்கக் காணோம். த காலம் பிள்ளை பெறுதல் இன்ப

நுகர்ச்சியின் நிகழ்ச்சியாகக் கருதப்படுவதால் பிரஜா விருத்தியைத் தடுத்தல் என்ற சங்கமும் அதற்குரிய நூல்களும் பெருகத் தலைப்பட்டுள்ளன. விவாகமும் இல்லறவாழ்க்கையும் நன் மக்களைப் பெற்று அவர்களை நல் வழியில் வளர்த்து நற்குடிகளாகப் பெருகச் செய்தலென்ற கொள்கைமாறி, சிற்றின்ப நுகர்ச்சிக்காகவே ஓர் ஆணும் பெண்ணும் விவாகம் செய்து கொள்வதென்ற எண்ணம் மக்களிடையே பாவி வருவதால், விவாகச் சட்டம், வாழ்க்கைச் சட்டம் இவைகளும் தலைகாட்டி வருகின்றன. வருடத்திற் கோர் பிரசவமும், குறைப் பிரசவமுமாகப் பெண்கள் அவதிப்பட்டுத் தசையும் என்புமாகக் கண் குழி விழுந்து காலோய்ந்து உடல் கூனித் திண்டாடும் பரிதாபக் காட்சி தீர வேண்டுமாயின், அதற்காகப் பிள்ளை பெறும் சட்டம் என்பதாக ஒன்று ஏற்படுதல் மிகையாகாது.

வீட்டுக் காரியங்களிலும் பிள்ளை வளர்ப்பிலும் முற்காலமிருந்த பெண்களின் தேகத்திடம், தற்காலத்தியப் பெண்களிடம் இல்லையென்பதுண்மை. பெண்களின் தேக நலம் பாதுகாக்கப்பட்டாலன்றி அவர்கள் தம் மக்களுக்கு வீட்டுக் கல்வி பயிற்றல் எங்ஙனம் முடியும்? இதிலும் விசேஷமான செய்தி யாதெனில், அநேகமாக தனவந்தர்கள் வீட்டில் ஒரு பிள்ளை பிறந்து விட்டால், அது வேலையாட்கள் வசம் ஒப்படைக்கப்படுவதன்றி, அடிக்கடி தாய் முகங் காணும் பாக்கியத்தையும் அக்குழவி அறவே இழந்துவிடுகின்றது. வேலையாட்கள் தம் இனத்தாரிருக்குமிடங்களிலேயே இக்குழந்தைகளுடன் திரிவதால் அருவருப்பான பழக்கம், பேச்சு, இவைகளே வீட்டுக் கல்வியாக ஏற்படுகின்றன. பிள்ளை வளர்ப்பும் வீட்டுக் கல்வியும் தாயைச் சேர்ந்த பொறுப்பாயின், அதற்குரிய கல்வி பெண்மக்களுக்கு போதிக்கப்படல் அவசியத்திலும் அவசியமாம்.

மக்களுக்கு வீட்டுக் கல்வி நன்கு அமையவேண்டுமாயின் மக்களைப்பெற்ற தாய், தந்தையர்கள் நல்ல மாதிரியாக நடந்து கொள்ளல் வேண்டும். பெற்றோர்களின் நடவடிக்கை தான் பிள்ளைகளுக்கு வீட்டுக் கல்வியெனப்படும். கடவுள்பக்தி, சமயப்பற்று, ஆடம்பரமற்ற வாழ்க்கை, கடுமொழியுரையாமை, பொய் சொல்லாமை முதலிய நற்பழக்கங்கள் பெற்றோரிடம், அதிலும் முக்கியமாய்த் தாயிடம் அமையாதிருக்குமாயின், அவ்வுதரத்தில் உதித்த மக்களுக்கு வீட்டுக் கல்வி எவ்வாறு கிடைக்கும்? பெண் மக்கட்குரிய படிப்பு பெரிதும் நிறுவப்படாதவரை பெண்கள் கற்றறிந்தவர்களாக மாட்டார்களென்பதும், பெண்கள் தக்க அறிவு படைத்தாலன்றி, பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாக வளர்க்கப்படமாட்டார்க .ளென்பதும்

(20-ம் பக்கம் பார்க்க)

# சமுதாயத்தில் ஆசிரியர் கடமை

**முருகு**

**ஆசிரியர் என்பவர் யார்?**

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்றார் வள்ளுவர். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றாள் ஒளவைப் பாட்டி. வாழ்க்கை நடத்துகின்ற, மக்கள் அனைவருக்கும் இன்றியமையாத இருகண்கள்தான் எண்ணும் எழுத்தும். இந்த இரு கண்களையும் (எண்—எழுத்து) திறந்து வைப்பவன்தான் ஆசிரியன்.

"இக்கால இளைஞர்களே வருங்காலப் பெரியோர்கள்" என்பது முதுமொழி. வருங்காலப் பெரியோர்கள்தான் இந்நாட்டை எதிர்காலத்தில் ஆளப் போகிறவர்கள். ஆகவே இக்கால இளைஞர்களை வருங்கால நாட்டையாள்வதற்கு ஏற்றவர்களாகத் தயார் செய்ய வேண்டும். இந்த மாபெரும்—மகத்தான பணியைச் செய்பவன் "ஆசிரியன்"

விஞ்ஞானி, விவேகி, வீரன், கலைஞன், தலைவன் முதலியவர்களை உற்பத்தி செய்பவன்தான் "ஆசிரியன்"

அரசியல், பொருளியல், சமூகவியல் முதலியவற்றைத் தெரிந்தவன்—தெரிவிப்பவன் "ஆசிரியன்"

மாற்றம், முன்னேற்றம் இவைகளுக்கு ஆதாரமாய் இருப்பவன் "ஆசிரியன்"

வாழ்வின் வழி காட்டியாய் உள்ளவன் "ஆசிரியன்"

மற்ற துறைகளிலே உள்ளவர்கள் போன்று வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான வழி இல்லை என்றாலும்—வசதிகள் பெறாவிட்டாலும் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பதை நிரூபித்துக் காட்டுவதற்காகவே வாழ்பவன் "ஆசிரியன்"

பொதுவாகத்தற்காலநிலையிலே ஆசிரியரை அறிமுகப்படுத்த வேண்டுமானால்— ஒட்டிய கன்னம்—குழிவிழுந்த கண்கள்—எண்ணெய் காணாத தலை—

---

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் இளமையில் நல்வழி புகட்டப்பெறாதவர்களாயின், நல்ல பிரஜையாக வாழ முடியாதென்பதும், நல்ல பிரஜைகள் குறைந்தால், அரசாங்கம் தக்க சட்ட திட்டங்களைக் கையாள நேருமென்பதும் வெளிப்படை. எனவே மக்கள் பிறப்பைத் தடுக்கும் சட்டமும், இதையும் மீறிப் பிறக்கும் பிள்ளைகளைச் சரிவர வளர்ப்பதற்குப் பிள்ளை வளர்ப்புச் சட்டமும் ஏற்படாது, மக்கள் தங்கள் கடமைகளைச் செவ்வனே யறிந்து நடந்து கொள்வார்களாக!

காய்ந்த வயிறு—உலர்ந்த உதடு—ஒட்டுப்போட்ட சட்டை—ஒழுங்கற்ற குடை—ஒல்லியான உருவம்—இவைபோதும்; பொதுமக்கள் ஆசிரியர் என்பதை உணர்ந்து விடுவார்கள்.

இம்மாதிரியான நிலைக்கு ஆசிரியர்கள் வரக்காரணம் என்ன? மற்ற தொழிலாளர்கள் சமூகத்திலே இருக்கும் ஒற்றுமை—கட்டுப்பாடு நமது ஆசிரியர் சமூகத்திலே கிடையாது. ஒற்றுமையின்மையால் எக்காரியத்தையும் நாம் சாதிக்க முடியாமல் போய் விட்டது— போய்க்கொண்டிருக்கிறது.

ஆகவே ஆசிரியர் சமுதாயம் முன்னேற வேண்டுமானால் மற்றவர்களைப்போல வாழ வேண்டுமானால், திகைப்பும்—திண்டாட்டமும் இன்றி இருக்கவேண்டுமானால் நமக்குள்—ஆசிரியருக்குள் ஒற்றுமை — கட்டுப்பாடு அவசியம். அப்போதுதான் நாம் எதையும் சாதிக்க முடியும்.

ஆசிரியர் நிலை இப்படி இருக்க இப்போது நாம் சமுதாயத்தின் நிலையைப் பார்ப்போம்.

எங்கு நோக்கினும் பஞ்சம், பசி, பட்டினி என்ற கூக்குரல். 'சாதிக் குறுக்கீட்டால் எங்கள் காதல் தடைப்பட்டுவிட்டது. ஆகவே நாங்கள் மாளுகிறோம்' என எழுதி வைத்து விட்டு மாளும் எத்தனையோ இளஞ் சோடிகள். மதச் சண்டைகளால் மண்டைகள் உடையும் காட்சிகள். "அன்பே சிவம்" "உயிர்களுக்குப் பணிவிடை புரிதலே உலகநாதருக்கு நாம் செய்யும் உயர்ந்த தொண்டு" "ஏழைகளுக்கு உதவுவதே ஏகாம்பரரின் கட்டளை" என்றெல்லாம் கொள்கையுள்ள தமிழ் நாட்டிலே எங்கும் வெறுப்பும், பொறாமையும் ஏசலும் தாண்டவமாடுகின்றன. கொலைச் செயல்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. ஆண்டவன் பெயரால் உயிர்கள் பலியிடப்படுகின்றன. ஏழைகள் வாட்டி வதைக்கப்படுகிறார்கள். பொதுவாக மக்கள் மூடநம்பிக்கையுள் ஆழ்ந்து கிடக்கிறார்கள்.

கற்பின் நிலைக்களனாக விளங்கிய தமிழகம் இன்று கற்பை விலை கூறும் காட்சி—உலகை யாண்ட தமிழன் இன்று ஊர்களிலே பிச்சை எடுக்கும் காட்சி—ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று வாழ்ந்து வந்த இனத்துள் இன்று பல கடவுட்கள், பல பிரிவுகள்—நாகரீகத்தில் திளைத்த தமிழகத்தில் இன்று நாற்சந்தியில் கஷ்டப்படும் காட்சிகள். சமத்துவமின்மையால் எங்கும் சண்டையும்—சச்சரவும்.

இந்நிலையில் ஆட்சியோ குடியாட்சி— அதாவது மக்களுக்காக—மக்களால் ஆளப்படும்—மக்களுடைய ஆட்சி நடைபெறுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளால்தான் நாடு ஆளப்படுகிறது. ஆனால்

தேர்ந்தெடுக்கும் மக்களின் நிலை என்ன? அவர்கள் எப்படி இருக்கிறார்கள்? அறியாமை என்னும் சேற்றில் அகப்பட்டுக் கொண்டு வெளிவரமுடியாது தவிக்கிறார்கள்.

உலகு—எங்கும் போர் மேகம் மூடிக்கிடக்கிறது, உலகை யழிக்கக்கூடிய புதுப்புது கருவிகள் புலைத்த வண்ணமே உள்ளன. ஒருவரை ஒருவர் விழுங்கும் பலப் பரீட்சைகள் நடந்துகொண்டே இருக்கின்றன. இந்த நிலையிலே எந்தப் பலமும் இல்லாத அப்பாவி நாடுகளும்—போரைத் தடுக்க வகையறியா "அய்க்கிய நாட்டு அமைப்பும்" உள்ளன.

**ஆசிரியரின் கடமை என்ன?**

இப்படி சமுதாயமும்—உலகமும் இருக்கின்ற நிலையிலே ஆசிரியருடைய கடமை என்ன என்பது ஒரு சிக்கலான கேள்வியாகத்தான் இருக்கிறது. சமுதாயத்தையும், ஆசிரியருடைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் ஆசிரியர்கள் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவேதான் தோன்றும். ஆனால் உண்மை அப்படியல்ல. உலகை அழிப்பதும்—ஆக்குவதும் ஆசிரியர்கள் கைகளில்தான் இருக்கிறது என்றால் அது ஒன்றும் மிகையாகாது.

சமுதாயத்தைச் சீர்திருத்தும் வழியில் ஆசிரியர் முன்னிற்க வேண்டும். ஏற்றத்தாழ்வில்லா—வர்க்கமற்ற சமுதாயத்தை அமைக்கும் பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்ததே. இப்போது இயலாதெனினும் எதிர்கால உலகைச் செப்பனிடும் பொறுப்பு ஆசிரியரிடம்தான் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

ஆகவே பிற்கால சந்ததியார்கள் நலமுடன் வாழவேண்டுமானால்—பிற்கால மக்கள் ஆசிரியர்களைப் போற்ற வேண்டுமானால்—எதிர்கால உலகை எழில் உலகாக்க வேண்டுமானால்—எதிர்காலத்தில் போரின்றி சமாதானம் தழைக்க வேண்டுமானால் — எல்லோருக்கும் வேண்டிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால்—மக்களின் மடைமையைப் போக்க வேண்டுமானால் ஆசிரியர்கள் அதிகமாக—மிக்க அதிகமாக உழைக்கவேண்டும். இப்போது உள்ள நிலையை மாற்றுவதற்கான மனமாற்றத்தில் ஆசிரியர்கள் ஈடுபட வேண்டும். அப்போதுதான் சமுதாயத்தின் சீர்கேட்டைப் போக்கமுடியும்; ஆசிரியர்களும் உண்மையில் உழைக்கிறார்கள்— உழைத்திருக்கிறார்கள் என்ற உண்மையும் புலப்படும்.

எதிர்கால ஆட்சியைத் திறம்பட நடத்துவதற்கான நற்பயிற்சிகளை எல்லாம் இளமை முதலே மாணவர்களுக்கு ஏற்படுத்தும் பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்ததே. மூடப் பழக்க வழக்கங்களில் உள்ளோரின் மனதை மாற்றும் கடமையும் ஆசிரியரைச் சார்ந்ததே.

எந்த வேலையைச் செய்வதற்கும் மனம்தான் காரணம். மனம் ஒழுங்காய் இருந்தால் வேலையும் ஒழுங்காய் நடக்கும். ஆகவே சட்ட மூலம் எதையும் நிறைவேற்றிட முடியும் என்று நினைக்கக் கூடாது. சட்ட மூலம் செய்யக்கூடிய காரியங்களும் பல வுள. ஆனால் மனமாற்றம் இல்லையேல் சட்டம் வந்தும். காரியம் வெற்றிபெற முடியாது. ஆகவே மனமாற்றம் தேவை. இதை உண்டாக்க ஆசிரியரால்தான் முடியும். அதனால் ஆசிரியர்கள் இதையுணர்ந்து தொண்டாற்ற வேண்டும். இவை எல்லாம் செய்வதற்கு ஆசிரியர்களுக்கு— நாட்டுப்பற்று, மொழிப்பற்று அவசியம்; சமுதாய நிலையைப்பற்றிய அறிவு வேண்டும். பொது நலம் பேணும் பொதுமைக் கொள்கையும் — முன்னேற்றம் விரும்பும் அறிவும் தேவை. இவைகளில்லா ஆசிரியர்களைப் பணியாற்ற விடவேகூடாது. அப்படி விடுவது பெரும் அபாயம்.

சுருக்கமாக:— "குழந்தைகளைப் பயமுறுத்தாமல் அன்பு வழியில் அறிவூட்டும் பெற்றோர்— தாங்கள் சொல்லுவதே தேவ வாக்கு என்று எண்ணாமல் சுய புத்தி வளரும்படி விட்டுக் கொடுக்கும் ஆசிரியர்—இதுதான் சித்தாந்தம் என்று சொல்லி மக்களை மூட நம்பிக்கைக்குள் ஆழ்த்தாத குருமார்—பொதுமக்களை ஆடு, மாடுபோல் கருதாமல் தங்கள் எஜமானர்களாகக் கருதும் மந்திரி—சில்லறை விஷயங்களில் ஈடுபடாமல் நாட்டின் நலமே பெரிதென்றெண்ணும் தேச பக்தர்கள்—கண்ணியமான தொண்டர்கள்—நிர்மாண ஊழியர்களே தேவை" என்று கூறிய லாலா லஜபதிராயின் வாக்குப்படி பெற்றோர்—ஆசிரியர்—மந்திரி—குருமார் — தேசபக்தர் — தேசத் தொண்டர்—நிர்மாண ஊழியர்— அறிஞர்—கலைஞர் இவர்களை உற்பத்தி செய்யும் கடமை— பொறுப்பு ஆசிரியர் கையில்தான் உள்ளது. இதையுணர்ந்து ஆசிரியர்கள் தங்கள் அறிவைப் பெருக்கிக்கொண்டு தொண்டாற்ற வேண்டும்.

# வீண் பொழுது போக்காதே!

சகோதரா, நீ வீண் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறாய். மூன்று வேளையும் ஆகாரத்தை குறைத்துண்பதற்குப் பதிலாக வயிறு புடைக்க உண்டுவிட்டு, "உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு" என வேதாந்தம் பேசி இரவு வேளை தூங்குவது போதாதென்று பகற் பொழுது முழுதும் பாயும்தலையணையுமாகக் காட்சியளிப்பது உனக்கு வெட்கமில்லையா?

சீர்மையான பொழுதை நேர்மையுடன் போக்குவதை விட்டுவிட்டு சீட்டாட்டம் ஆடுவது நல்லதா? என்று உன்னைத்தான் கேட்கிறேன். எனதன்பிற்குரிய சோம்பேரியே சொல். உன் போன்றவர்களால்தான் வறுமையும் பசிப் பிணியும் நம் நாட்டில் அதிகரித்துவிட்டது. ஆம், நாட்டின்முன்னேற்றத்திற்குப்பெருந் தடையாக இருப்பது சோம்பேறித்தனம்தான் என்று துணிந்து எழுதுவேன்—சொல்லுவேன்.

"செய் அல்லது செத்துப் போ" என்ற லிங்கனின் வார்த்தையைஉன் இதயஒலிஒவ்வொரு விநாடியும் ஒலிக்கட்டும். "Time is Gold" என்ற ஆங்கில சொற்கள் உன் மூளைக்கு வேலைகொடுக்கட்டும். "இந்த விநாடி முதல் நான் உழைத்து மேன்மையடைவேன்" என்று உள்ளுக்குள்ளே கூறிக்கொண்டு உன் வாழ்வை வளம்பெற நடத்துவாயாக.

நாம் இப்புவியில் பிறந்துவிட்டோம். இறப்பது உறுதி. இருக்கும் வரையாவது சேமமுற வாழ வேண்டாமா? இனி நாம் பிறக்கப் போவதுமில்லை. எனவே நாம் ஒளிமிகக பெருவாழ்வு வாழ வேண்டாமா? அப்படியானால், அப்படி நாம் வாழ விரும்பினால், உழைக்க வேண்டாமா? உழைத்தால்தானே பலனடைய முடியும். எறும்பைப் பார். அது ஒரு அற்ப பிராணி என்று உன் இருளடைந்தகண்ணிற்குத் தோன்றும். இல்லை. அது விசித்திரமானது. ஒவ்வொரு விநாடியும் பவுன் எனக் கருதி அது பணியாற்றி வருகிறது. வெறும் தண்ணீரை மட்டும் குடித்துவிட்டு ஒருநாள் இருநாளல்ல நூற்றிஆறுநாட்கள் உயிருடன் ஓயாது வேலைசெய்து கொண்டிருக்கும். பார்த்தாயா! எவ்வளவு சுறுசுறுப்புடன் இருக்கிறது. எறும்பும் இந்தக்கட்டுரையும் உன் வாழ்வையே மாற்றியமைக்கும் மகத்தான சக்தி வாய்ந்தவையாக இருக்க விரும்புகிறேன்.

எவ்வளவு பனி, மழை கொட்டிக்கொண்டிருப்பினும் அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் படுக்கையைவிட்டு எழுந்துவிடு. கடிகாரம் இல்லையே என்று நொண்டி

சமாதானம் கூறுதே! நீ ஐந்து மணிக்கு எழுந்துவிட வேண்டும் என்று எண்ணி இரவில் படுக்கும் போது தூங்குவாயானால் அந்த எண்ணமே உன்னைக் கண் விழிக்கச் செய்துவிடும். வேண்டுமானால் சோதித்துப் பார்.

காலைக் கடன்களை முடித்துவிட்டு ஆசனப் பயிற்சிக்கென்று குறைந்தது ஒரு மணி நேரம் ஒதுக்கிவிடுவது நல்லது. ஏனெனில் உடல் நலமாய் இருந்தால் தான் உற்சாகத்துடன் வேலை செய்ய முடியும். எனவே உடற் பயிற்சி தினசரி தவறாது செய்து வா. சுத்தமான குளிர்ந்த நீரில் குளித்துவிடு.

இன்னின்ன நேரத்தில் இன்னதுதான் செய்ய வேண்டும் என்று காலத்தை வகைப்படுத்திக்கொள். உன் வாழ்வு வளம் பெற வேண்டுமானால் வழி வகுத்து அதன்படி வாழு. என் உடன் பிறந்த சகோதரன் என்ற முறையில்தான் இப்படி எழுதுகின்றேனேயொழிய உன்னை இழிவுபடுத்தும் குறுகிய மனப்பான்மையால் அல்ல.

தன் கையே தனக்குதவி என்றபடி உனக்கு நீயே உதவி செய்து கொள்ள வேண்டும். 'அவர்' வேலை வாங்கித் தருவார், 'இவர்' வேலை வாங்கித் தருவார் என்று நம்பி உன் விலை மதிப்புள்ள நேரத்தை வீணாக்கி விடாதே! செத்த பிணம் உயிர் பெற்றெழாது. அதுபோல உன்னால் வீணாகக் கடத்திவிடப்பட்ட ஒவ்வொரு விலை மதிப்பான விநாடியும் மீண்டும்திரும்பி வராது என்று எச்சரிக்கிறேன்.

உன் எண்ணம் புதுமை கலந்த புரட்சி மிக்கதாய் இருக்கட்டும். உன் செயலில் உற்சாகம் கலந்து ஒளி வீசட்டும். உன் கண்ணை இமை காப்பது போல் காலத்தை நீ நல்லவழியில் செலவிடு.

கடந்ததைப் பற்றி வருந்திக் கவலைப்படாதே! இனி நடக்கப் போவதைக் கவனி. கடந்ததைப் பற்றி வருந்துவது முட்டாள் தனம் என்று ஒருவர் கூறுகிறார். அவர் கூறுவது முற்றிலும் உண்மைதான் என்பதை நன்கு சிந்தித்துப்பார்.

நேற்றுவீதியிலேவாழைப்பழம் சுமந்து விற்றவன் இன்று வான் புகழுடன் வாழ்கின்றான் ஏன்? அவன் காலத்தை வீணாக்காது உழைத்தான். உயர்வடைந்தான். அவனைப்போல் நீயும் ஏன் வரக் கூடாது?

தும்மினால் மூக்கினின்று பருக்கை (சோறு) விழக்கூடிய அளவுக்கு என் பெற்றோர்கள் சோறு போட்டு என்னை அன்புடன் வளர்த்து வருகிறார்களே! நான் ஏன் வேலை செய்ய வேண்டும்? நான் ஏன் பிறருக்காக உழைக்க வேண்டும்? நான் ஏன் என் இரத்தத்தை வியர்வையாக மாற்றி வேலை செய்யவேண்டும்? என்று குறுகிய எண்ணம் கொண்டிருக்கிறாயா?

அல்லது நான் யாரிடமிருந்து எதையும் விரும்பவில்லை, நான்

உயர்வடைய வேலை செய்ய வேண்டும், பிறருக்காக உழைப்பதுதான் என் லட்சியம், நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடுவேன் என்ற பரந்த மனப்பான்மை கொண்டு பணியாற்றுகிறாயா?

ஊரை ஊதாரித்தனமாகச் சுற்றிக்கொண்டு ஒய்யார நடை நடந்துவரும் சிங்காரத் திருநாட்டில் பிறந்த இளங்காளையே! ஒன்றும் செய்யாதிருந்து ஊராரை ஏமாற்றிவிடலாம் என்று எண்ணி விடாதே! இப்படிச் செய்வதால் உன்னை நீயே நாசமாக்கிக்கொள்கிறாய்.

எனதன்பிற்குரிய சகோதரனே, நான் உன்னை, 'அதைச் செய்,' 'இதைச்செய்', 'அப்படிப் போ' 'இப்படிப் போ' என்று கட்டாயமோ நிர்ப்பந்தமோ செய்யவில்லை. ஆனால், விளக்கைப் பிடித்துக்கொண்டு கிணற்றில் மட்டும் விழுந்து விடாதே! சற்று நிதானமாக. ஒதுங்கி நடந்து செல்வாயாக! அவ்வளவுதான்நான் உனக்குக் கூறும் அறிவுரைகள்.

நீ வாழ்ந்து வளம் பெற்றால், உன்னை அண்டும் அனைவரும் வாழ்வார்கள். உன் உற்றார் உறவினர் வாழ்வார்கள். உன் சகோதர சகோதரிகள் வாழ்வார்கள். உன் நாடு நலமடையும். உன்னால் உலகமே நலமடையும்.

எனவே உனக்காகவும், பிறர்க்காகவும், நாட்டிற்காகவும், வீண் பொழுது போக்காது உழைத்து சமுதாயத்தை உயர் நிலைக்குக் கொண்டுவரப்பாடுபட வேண்டும் என்று உன்னையும் என்னையும் ஆசீர்வதிக்கிறேன்.

(சௌபாக்கியம்)

---

# சிந்தனைச் செல்வங்கள்

## (காரமடை, துரை. முருகேசன்)

1. "மோட்சம், மறுபிறப்பு, அழியாத ஆத்மா என்பதெல்லாம் வெறும் பொய். மனிதன் பிறக்கிறான், உயிரோடு வாழ்கிறான். பின்னர் இயற்கை நிலையை (மரணத்தை) அடைகிறான். இதுதான் உண்மை."

—சர். சி. வி. இராமன்.

2. மனிதர்கள் பெரியவர்களாகப் பிறப்பதில்லை. அவர்கள் பெரியவர்களாக்கப்படுகிறார்கள். அதாவது மனிதர்கள் பிறக்கிறார்கள். ஆனால் மனிதத் தன்மையை உண்டாக்க வேண்டியிருக்கிறது.

வி. ஸ. காண்கடேர்.

# நினைவுத்திறன்

மனிதன் தன் வாழ்நாளில் எவ்வளவோ பொருள்களைப் பார்க்கிறான். அவைபற்றிக் கேட்டு அறிகிறான். பார்க்கப்படும் பொருள்களின் தோற்றங்களும், அவைபற்றி அறியும் கருத்துக்களும் அவ்வப்போது அவனது மூளையில் பதிவு செய்யப்பட்டுத் தேவையான சமயங்களில் வெளிப்படுகிறது. இவ்வாறு தான் அறிந்தவற்றை நினைவிலிருத்திக்கொள்ளும் தன்மையையே நினைவுத்திறன் என்கிறோம். அறிந்தவற்றைப் பிறிதொருபொழுது நினைவிற்குக் கொண்டுவர முடியாமற்போயின் அதை மறதி என்கிறோம்.

பெரும்பாலோர் மறதி என்னும் நோயினால் அல்லற்படுகிறார்கள். 'முக்கியமாகத் தேர்விற்கு நிற்கும் மாணவர்களிடையே இந்நோய் மிகவாகப் பரவிப் பெரிதும் வாட்டுகிறது. தாம் படித்த கருத்துக்களையெல்லாம் ஞாபகத்திற் கொள்ள முடியாது பலவற்றை மறந்துவிடுகிறார்கள்.

இந்நோயைத் தீர்த்து நல்ல நினைவுத்திறனைப் பெற வழி தேடுமுன் நினைவுத்திறன் இயங்குவது பற்றிய அடிப்படைக் கருத்தை அறிதல்வேண்டும். முதலில் நினைவு பற்றிப் பலர் கொண்டுள்ள சில தவறான கருத்துக்களை நீக்கவேண்டும்.

**1. ஆழ்ந்த அறிவு படைத்தவர்களிலும் ஒரு சிலர்தான் நல்ல நினைவுத்திறனைப் பெற்றிருக்கிறார்கள்.**

இது தவறான கருத்தாகும். போதுமான அறிவு பெற்ற எல்லா அறிஞர்களும் நல்ல நினைவுத்திறனைப் பெற்றிருக்கிறார்கள். அத்திறனை உபயோகிக்க வழி தெரியாதவர்களுக்கே அது குறைவு எனக் கூறலாம்.

**2. ஆண், பெண்ணை விட அதிக நினைவுத்திறன் பெற்றவனாக இருக்கிறான்.**

**பெண்களே அதிக நினைவுத்திறன் பெற்றவர்கள்.**

இரு கூற்றுக்களும் தவறானதாகும். அறிவியல் ஆராய்ச்சிகளின்படி இவற்றிற்குச் சிறிது கூட ஆதாரம் இல்லை. ஆண், பெண் இருபாலாரிடத்தும் நினைவுத்திறமை ஒரே அளவுதான் இருக்கிறது.

**3. ஒருவன் தனது நினைவுத்திறனின் வளர்ச்சியைக்காண முடியும்.**

தவறாகும். நினைவுத்திறன் என்பது அடிக்கடி உபயோகப்படுத்துவதால் வளரும் தசையைப் போன்றதல்ல. அதைச் சரியான முறையில் உபயோகிப்பதெப்படி என்பதை அறிந்துகொள்வதே ஒருவன் செய்யக்கூடிய பெரிய காரியமாகும்.

**4. ஒரு பொருளைப்பற்றி நல்ல நினைவுத்திறன் பெற ஒருவன் தனது முழுக்கவனத்தையும் தேவைக்குமேற்பட்ட நேரத்தையும் செலவிட்டால் போதும்.**

இதுவும் தவறாகும். உண்மையில் இச்செயல் நினைவுத்திறனை அழிக்க உதவி செய்யும். இடையிடை நேரம் விட்டுப் பொருள்களை ஆராய்வதின் மூலம் நல்ல நினைவுத்திறனைப் பெறலாம்.

பொதுவாக ஒரு பொருளை நினைவில் கொள்வதும் அதை மறந்துவிடுவதும் இரு தன்மைகளைப் பொறுத்திருக்கிறது. முதலாவது கருத்தின் ஆழம். பொருள்களைப் பற்றி அறிகிற கருத்துக்கள் மனதில் ஆழப் பதிந்தால் அவை என்றும் நினைவில் நிலைத்து நிற்கும். இரண்டாவது சேர்க்கை வலிவாகும் ஒரு பொருளைப் பற்றி நாம் அறியும் கருத்துக்கள் முன்பே அறிந்த வேறு பலவற்றோடு இணைக்க அல்லது சேர்க்கப்படாவிட்டால் அக்கருத்துக்கள் நம் நினைவில் நிற்கா.

இதைச் சாதாரணமாக எல்லோரும் அறிந்துகொள்ளலாம். மூக்குக்கண்ணாடியைக் கழற்றி வைக்கும் ஒருவர் அதை வைக்கும் இடமாகிய அலமாரியின் இரண்டாவது தட்டு என்பதைக் கவனத்திற் கொண்டால், பின் மறுநாள் மூக்குக் கண்ணாடி என்ற நினைவு ஏற்பட்டவுடன், இமைப் பொழுதில்—அலமாரி—இரண்டாவது தட்டு—என்பதும் நினைவிற்கு வரும்.

மனிதனது மூளை ஒரு மிகப் பெரிய நூல் நிலையத்தைப் போன்றமைந்துள்ளது. ஒரு நூல் நிலையத்தில் எப்படிப் புத்தகங்கள் இயல்வகை, ஆசிரியர் பெயர், புத்தக எண் ஆகியவை குறித்துப் பிரிக்கப்பட்டு வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன் வோ அப்படியே மூளையின் பகுதிகளில் மனிதன் அறியும் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. இயல்வகை, எண் தெரியாத புத்தகத்தை நூல் நிலையத்தில் தேடுவது எவ்வளவு கடினமோ அவ்வளவு கடினமாகும் சேர்க்கை வலிவில்லாத கருத்துக்களை மனிதன் நினைவில் நிலைநிறுத்திக் கொள்வது.

தாம் படித்தவற்றைத் திரும்ப நினைவிற்குக் கொண்டுவர இயலாது மறந்துவிடும் நிலையில் பலர் உள்ளனர். இதற்குக் காரணம், ஒன்று தாம் படிப்பதை எண்ணிப் பார்க்கச் சிறிதும் விருப்பமில்லாதவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். அல்லது படிப்பதையே புரிந்துகொள்ள முடியாத நிலையிலுள்ளவர்களாக இருக்கவேண்டும்,

படிக்கும்போது முழுக் கவனமும், படிக்கப்படும் பொருளின்பால் செலுத்தப்படாவிட்டால் படிப்பது மனதிற் பதியாது. எண்ணம் பிற பொருள்களின் மீது அலையும்போது, கண் பார்த்தபடி இருந்தாலும், வாய் உச்சரித்துக்கொண்டிருந்தா

லும், படிக்கப்படும் பொருளின் கருத்துக்கள் மூளையில் ஏற்றுக் கொள்ளப்படாமல் நின்றுவிடு கின்றன. இது எல்லோராலும் உணரக்கூடியதாகும்.

முழுக் கவனத்துடன் படிக் கும்போது அறியப்படும் கருத் துக்கள் ஆழம் நிறைந்தவைக ளாகிச், சேர்க்கை வலிவுபெற்று நினைவில் நிலைத்து நிற்கிறது. புரியாத நிலையில் படிக்கும்போது பொருளின் கருத்துக்கள் சேர்க்கை வலிவிழந்து மனதில் நன்கு பதியப்படாமல் போய் விடுகின்றன. ஆகவே அவை நினைவிற்கு வருவதில்லை.

மனப்பாடம் செய்யவேண்டிய பகுதிகளைப் படிப்பதற்கு படுக்கை செல்லுமுன் உள்ள நேரம் நல்ல நேரமாகும். ஏனெ னில் படுத்தபின் உடலுறுப்புக் கள் ஓய்வு பெறுவதால் படுக்கு முன் படிக்கப்பட்ட கருத்துக் கள் தனிக் குவியலாக ஆழப் பதிய போதிய நேரம் கிடைக் கிறது. மனப்பாடப் படிப்பிற்கு முற்றிலும் மாறான நேரம் விடி யற்காலையாகும். ஏனெனில் எழுந்த பின் உடலுறுப்புக்கள் இயங்க ஆரம்பிக்கின்றன. அல் லாமலும் புதிய, தொடர்பில்லா எண்ணங்கள் தோன்றிக் கருத் துக்கள் ஆழப் பதிந்து குவிய லாக மாறுவதைத் தடுக்கின்றன.

மனிதன் பின்னால் செய்யப்பட வேண்டிய பல வேலைகளை முன் கூட்டியே எண்ணி அதைச் செய் யக் காத்திருக்கிறான். நல்ல நினை வுத்திறனைப் பெற்றவர்கள், அத னைப் பயன்படுத்தி வேலைகளைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்ய முற்படுகின்றனர்.

நினைவுத்திறனில் நம்பிக்கை வைக்காமல் பிற்பட்டுச் செய்ய வேண்டிய முக்கிய வேலைகளைத் தமது **நாட்குறிப்புப் புத்தகத்தில்** குறித்துக்கொள்ளும் பழக் கத்தை மேற்கொண்டு பயனடை வோர் இன்று பலர் இருக்கின்ற னர். ஒவ்வொரு நாளும், அன் றன்று செய்யப்பட வேண்டிய வேலைகளை காலையில் எழுந்த வுடன் புத்தகத்தைப் பார்ப்ப தன் மூலம் அறிவுறுத்தப்படுவ தால் அவ்வேலைகள் மறதியில்லா மற் செய்யப்படுகின்றன.

நினைவுத்திறனை எல்லோரும் பெற்றிருந்தும் மிகப் பலர் அத னைப் பயன்படுத்தும் முறைகளை யறியாது அல்லது அறிய எண்ண மில்லாது விட்டுவிடுகின்றனர். ஒரு சிலரே சரியான வழிகளில் அதன் முழுப் பயனையும் அடைய முயற்சிக்கின்றனர்.

— மன்றம்

# நம்நாடு முழுவதும் நற்பள்ளி அமைப்போம்!

(J. M. அய்யா, ஆசிரியர், சாலைமரக்குளம்)

1

நம்நாடு முழுவதும் நற்பள்ளி அமைப்போம்
நாட்டினர் யாவரும் நலமுற உழைப்போம்
கல்லார் உளரென்ற கருத்தினை மாய்ப்போம்
எல்லார் உள்ளமும் இனித்திட இசைப்போம்.

2

எல்லோரும் ஓட்டுரிமை தான் பெற்ற நாட்டிலே
பல்லோரும் பயிலாதிருந்தாலே பாரிலே
நல்லதோர் அரசாங்கம் நடமாட இயலாதே
உள்ளதிந்த உண்மைதனை உரைத்திடுவோம் உலகினுக்கே.

3

வேதாந்தம் முதலிருந்து விஞ்ஞானம் வரையெல்லாம்
வித்தையின்றி எவனிங்கு விருத்தி செய்ய இயன்றிடுமாம்
இத்தகைய நிலையதனை எடுத்தியம்பி நாமெல்லாம்
கற்றிடவே காலமெல்லாம் கவலையுற்றுப் புகட்டிடுவோம்.

# பப்பாளி -- Papaya

பப்பாளி சிறுமர இனத்தைச் சேர்ந்தது. அதன் இலை பார்வைக்கு ஆமணக்கு இலையை ஒத்து ஏழு பிரிவுகளை உடையதாக இருக்கும். இது இந்திய உப கண்டத்தில் எல்லாப் பகுதிகளிலும் — வீட்டுக்கொல்லைகளிலும் தோட்டங்களிலும் வளர்க்கப்படுகின்றது.

இதில் இரண்டு வகையுண்டு; ஒன்று ஆண் மரம்; மற்றொன்று பெண் மரம். ஆண் மரம் பெரும்பாலும் காய்ப்பதில்லை; பூப்பதோடு நின்றுவிடும். அது பூக்கும்போது கொடி போன்ற காம்புகள் மரத்திற்கும் இலையின் அடிக் காம்பிற்கும் இடையில் உள்ள பகுதியில் தோன்றுகின்றன. அக்காம்புகளில் சிறுசிறு பூக்கள் காணப்படும். சில ஆண் மரங்களில் கொடிபோன்ற பூக்காம்புகளில் இங்கொன்றுக் அங்கொன்றும் பூக்காம்புக்கொன்றாக காய்கள் காய்ப்பதும் உண்டு. எனினும் அவை சிறு மாங்காயளவுக்கு மேல் பருப்பதில்லை.

பெண் மரங்களில் கொடி போன்ற பூக்காம்புகள் கிடையா. மரத்திலேயே இலை அடிக்காம்புகளுக்கிடையில் பூக்கள் தோன்றும்; பெரியவையாக இருக்கும். காய்களும் பெரியவை. அவை ஒவ்வொன்றும் சிறு முலாம்பழம் அளவு பருமனுடையவை.

**வரலாறு:**

இன்று நாடு முழுவதும் காணப்படும் இச்சிறு மரம் இந்நாட்டுக்குச் (Indigenous) சொந்தமானது அன்று. இது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம்; ஆனால் உண்மை. இம்மரம் அயல் நாட்டுப் பொருள். அதன் பூர்வீக இருப்பிடம் சொந்த நாடு அமெரிக்கா. அங்கிருந்து அது மற்றநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது.

ஜெனோவா வீரன் எனப் போற்றப்படும் கொலம்பஸைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். ஐரோப்பாக் கண்டத்துக்கு மேற்கில் பல்லாயிரங்கல் தொலைவில் ஒரு பெரிய நிலப் பகுதி உள்ளதென்பதை உலகத்துக்கு அறிவித்தவன் அவன். அந்நிலப்பகுதியே பின்னர் அமெரிக்காவென அழைக்கப் பட்டது. கொலம்பஸ் அமெரிக்காவுக்கு இரண்டாவது முறை சென்று திரும்பியபோது ஸ்பெயின் நாட்டுக்கு இம்மரம் கொண்டு வரப்பட்டது.

"மாயன்" என்பது அமெரிக்கக் கண்டத்திலுள்ள பழங்குடி மக்கள் பேசும் மொழிகளில் ஒன்று. அம்மொழியில் இம்மரத்திற்கு "அபாபாய்" என்று பெயர். அப்பெயர் ஸ்பானிய, மொழியில் "பப்பாயா" என மாறியது. நாளடைவில்

இம் மரம் வாணிபத்திற்காக இந்திய நாட்டை யடைந்த ஸ்பானிய போர்த்துகீசிய மக்களால் தமிழ் நாட்டிற்கும் கொண்டு வரப்பட்டது. ஐரோப்பிய மொழிகளில் "பப்பாயா" என வழங்கிய சொல் தமிழில் "பப்பாளி" எனத் திரிந்தது. இது தான் அதன் வரலாறு.

## பப்பாளியின் பயன்

இம்மரத்தின் பயனுடைய பகுதி அதன் காய், பழம், இலை, வேர் ஆகியனவாகும். மரப்பட்டையிலுள்ள நாரினால் கயிறு திரிக்கலாம். அதன் காயும் பழமும் உணவுப்பொருளாகவும், மருந்துப் பொருளாகவும் பயன்படுகின்றன.

நன்கு முற்றிய பப்பாளிக் காயின் பாலில் "பெப்பெயின்" எனும் பொருள் ஒருவகை (Enzyme) நுரைப்புளியம். இது தசையை வளரச் செய்யும் மாமிசம், முட்டையின் வெண் கருப்போன்ற உணவுப் பொருள் ஆகியவற்றைக் கரைத்து நன்று செமிக்கச் செய்யும் குணமுடையது. இது தன் நிறையைப் போல் 200 மடங்கு நிறையுள்ள இரத்தத்தில் உள்ள (Febrin) நிணநீரை செமிக்கச் செய்யும் திறனுடையது. மேனாட்டு வைத்திய முறைப்படி தயாரிக்கும் சீரண மாத்திரைகளில் "பெப்பெயின்" மிகுதியும் சேர்க்கப்படுகின்றது. மேனாட்டு வைத்தியர்கள் "பெப்பெயினைத் தனியாகப் பிரித்தெடுத்து குன்மம், அக்கினி மந்தம் முதலிய நோய்களுக்கு உபயோகிக்கின்றனர். 7 குன்றியளவுள்ள "பெப்பெயின்" உணவாகக் கொள்ளும் உழக்கு பாலைச் செமிக்கச் செய்யவல்லது. சாதாரணமாக கறந்து வைத்திருக்கும் பாலில் "பெப்பெயின்" கொஞ்சம பட்டால் பால் தயிராக உரைந்து விடும்.

அகட்டுநீர் (Gastric Juice) எனும் ஜாடராக்கினிக் குறைந்து குடலின் உட்புறத்திலுள்ள வழுக்கைப் பொருள் நோயுற்று அளவில் மிகுந்துள்ள நிலையில் "பெப்பெயின்" சிறந்த குணமளிப்பதாகக் கூறப்படுகின்றது.

அமுது

---

## சிந்தனைச் செல்வங்கள்

3. படகில் தண்ணீரும், வீட்டில் செல்வமும் நிறைந்துவிட்டால் இரு கைகளாலும் அள்ளி அள்ளி வெளியே தள்ளுங்கள். அப்பொழுதுதான் வீடும், படகும் பிழைக்கும்.

—கபீர்.

4. பிழையை எடுத்துக்காட்டாமல் விடுவது அறிவுத்துறையில் ஒழுக்கமின்மையை ஆதரிப்பதாகும்.

—காரல் மார்க்ஸ்.

16-ம் பக்கத் தொடர்ச்சி) வரை அவர் எழுதிக்கொண்டேயிருந்தார்! ஆம். இறப்பைத் தழுவும் வரையிலே முப்பதாண்டுகள் ஓயாது உழைத்தார்! எழுதிக் கொண்டேயிருந்தார்!

டிக்கன்சின் எழுத்துப்படையல்கள் அத்தனையும் எண்ணத் தோட்டங்கள், சிந்தனைச் சித்திரங்கள், கருத்துக்களஞ்சியங்கள்! டிக்கன்ஸ் தன் எழுத்துக்களில் மேட்டுக்குடியினரைப் படம் பிடிக்கவில்லை! வாடி வதையும் மத்யதர வகுப்பினரையும், வாழ்வின் அடித்தளத்திலே வறுமையிலே உழலும் எளியோரையும் படம் பிடித்தார்!

மலர்த்தோட்டம் சூழ்ந்த மாளிகையிலே, அறுசுவை உண்டியருந்தி, இடை குலுக்கி விழி வெட்டால் உள்ளத்தை வெட்டும் தேனிதழ்க்காரிகளுடன் கொஞ்சிக் குலவும் சீமான்களைப்பாராட்டி டிக்கன்ஸ் எழுத்தோவியம் தீட்டவில்லை! அவர்களின் கயமைத் தனங்களுக்குச் சவுக்கடி கொடுத்தார், வன்மையாக.

டிக்கன்ஸ் சமுதாயத்தின் சீர்கேடுகளைக் கண்டு சிரித்தார்! இச்சீர்கேடுகளை உண்டாக்கி அவைகளின் துணையால் தம் சொந்த வாழ்வில் சோபிதம் தேடிக்கொள்ளும் சழக்கர்களைச் சாடினார்! சீர்கேடுகள் நிறைந்த சமுதாயம் சுகந்த மலர்ச்சோலையாக மாற வழிவகைகளையும் தீட்டினார், தம் எழுத்துக்களிலே.

மனிதன் கொடியவனாக மாறுவது சூழ்நிலையில்தான். 'கொடியவனாக இருந்தாலும் அவன் உள்ளத்தில் சில நற்குணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலே எண்ணற்ற பாத்திரங்களைப் படைத்திருக்கிறார், டிக்கன்ஸ். கொடியவர்கள் சமுதாயத்தில் தோன்றாமலிருக்க— 'ஆண்டான்—அடிமை'யை அனுமதிக்கும் இழிந்த சூழ்நிலை விலகி, 'எல்லோர்க்கும் எல்லாம் என்றிருப்பதான ஒரு சமுதாயம் தோன்றவேண்டும் என்று வலியுறுத்தினார், டிக்கன்ஸ், தம் எழுத்துக்களிலே.

டிக்கன்சின் எழுத்துக்களிலே 'மாளிகை' தெரியாது. 'மண் குடிசை' தெரியும். 'தென்றல்' வீசாது. 'புயல்' வீசும். 'உற்சாகப் பண்' ஒலிக்காது. 'குமுறல் இடி' கேட்கும்.

டிக்கன்சின் எழுத்துப்படையல்கள் இங்கிலாந்தில் மட்டுமல்ல, அமெரிக்கா போன்ற தூர நாடுகளிலெல்லாம் விரும்பிப் படிக்கப்பட்டன. ஆங்கிலம் தெரிந்தோரின் இதயமெல்லாம் அவர் நூல்கள் இடம்பெற்றுவிட்டன. திக்கெட்டும் வீசத் தொடங்கிற்று, அவரது புகழொளி!

"தாங்கள் எங்கள் ஊருக்கு வரவேண்டும். தங்கள் எழுத்தோவியங்களின் சில முக்கிய காட்சிகளைப் படித்துக்காட்ட வேண்டும். அதற்கான கூட்டங்

களை ஏற்பாடு செய்கிறோம். கட்டணம் தந்து தங்கள் கூட்டங்களுக்கு வந்து தங்களைக் காணவும் தங்கள் உரை கேட்கவும் எண்ணற்ற மக்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். கட்டணம்வழி வரும் நிதி தங்களுக்குக் காணிக்கையாகத் தரப்படும். தாங்கள் அவசியம் வரவேண்டும்"—இதுபோல பல ஊர்களிலிருந்து டிக்கன்சுக்கு அழைப்புகள் குவிந்தன. டிக்கன்ஸ் அந்த அழைப்புகளை ஏற்றுக்கொண்டார். பல ஊர்களிலே வெள்ளம்போல கூடியிருந்த மக்கள் மத்தியிலே அவர் தான் தீட்டிய எழுத்தோவியங்களிலிருந்துமுக்கியமான சில காட்சிகளைப் படித்துக்காட்டினர். அவைகளைக் கேட்டு மக்கள் மகிழ்ச்சி வாரிதியிலே மூழ்கினர்! கட்டணம் வழி மக்கள் தந்த பணம் டிக்கன்ஸ் காலடியிலே குன்றுபோல் குவிந்தது! இங்கிலாந்தில் மட்டுமல்ல, அமெரிக்காவுக்கும் சென்று பல ஊர்களிலே இலக்கிய உரைகளாற்றி, ஏராளமான செல்வம் சேர்த்தார், டிக்கன்ஸ்! ஓயாத சுற்றுப்பயணம்! செல்லும் இடமெல்லாம் விரும்பி வரவேற்கும் மக்கள்! கடினமாக உழைத்தார், டிக்கன்ஸ்! பணம் திரண்டது! பணமோகினி அவரைத் தழுவிக் கொண்டாள்! இடைவிடாது முத்த மழை பொழிந்துகொண்டேயிருந்தாள்!

ஓயாத உழைப்பால், தன் எழில்மிகு எழுத்தால், குவித்த பணத்தைக்கொண்டு தன் இளமைக்கால இன்பக் கனவுகளை நிறைவேற்றிக்கொண்டார், டிக்கன்ஸ். ஆம், இளமையிலே தன் இதயங்கவர்ந்த 'கேட்ஷில் பிளேசை' வாங்கி அதிலே குடியேறினார் டிக்கன்ஸ். அமைதி மிகுந்த தன் அந்திய நாட்களை டிக்கன்ஸ் இந்த மாளிகையிலேதான் கழித்தார், 'ஓயாத உழைப்பால் உயர்வு பெறலாம்' என்ற உண்மைக்கு டிக்கன்ஸ் ஓர் எடுத்துக்காட்டு! எழுத்தால் பெரும் பணம் சேர்க்கலாம் என்பதற்கும் அவர் ஓர் விளக்கம்!

உலகம் ஏத்தும் எழுத்துகளைப் படைத்த அந்த எழுத்துச் சிற்பியின் கரங்கள் 1870-ம் ஆண்டில் நிரந்தர ஓய்வு பெற்றுவிட்டன. ஆம், இந்த ஆண்டில் தான்—'கேட்ஷில் பிளேசி'ல் அவரது இறுதி மூச்சு காற்றோடு கலந்தது.

---

ஆயிரமாயிரம் மக்கள் அவரது பிரிவுக்காகக் கண்ணீர் சிந்தினார்கள். வேதனைத் தீயிலே கருகினார்கள். அவர்கள் உள்ளமெல்லாம் துன்ப வெள்ளம் பெருக்கெடுத்தோடிற்று!

எண்ணற்றோர்க்கு எழுத்தால் இன்பம் தந்தார் டிக்கன்ஸ். அவர்கள் இதயத்திலே புத்துணர்வைப் பரப்பினார்; புது வாழ்வு பெறப் போராடத் தூண்டினர். இத்தகைய மாண்பமைந்த டிக்கன்ஸ் இறந்தபோது அவருடைய நெருங்கிய நண்பர்களில் ஒருவரான தாமஸ் கார்லைல்

(35-ம் பக்கம் பார்க்க)

# திருவள்ளுவர் திருநாள்

எல்லாத் துறைகளிலும் கருத்து வேற்றுமை கொண்டு ஒருவரிலிருந்து ஒருவர் முரண்பட்டுக்கிடக்கும் தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் ஆற்றல் இரு பெரும் சக்திகளுக்குத்தான் உண்டு.

அத்தகைய ஆற்றல் படைத்த ஒரு சக்தி, தமிழ்.

மற்றொன்று, திருக்குறள்.

"தமிழென்று தோள் தட்டி ஆடு!—நல்ல தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு" என்கிற பண் இசைக்கப்பட்டால் போதும். தமிழ் இனத்தவர் அனைவரும் ஒன்று கூடிவிடுகின்றனர். தங்களுக்கிடையே இருக்கிற ஆயிரம் வேற்றுமைகளையும் மறந்துவிடுகின்றனர். தமிழுணர்ச்சி தலைக்கேறிய இளைய சிட்டுக் குருவிகளாய் மாறிவிடுகின்றனர்.

தமிழ் மொழி என்கிற பிரச்சினை வருகிறபோது தமிழர்களுக்கிடையே இருக்கிற கட்சிப் பூசல், சாதிப் பூசல், சமயப் பூசல் இன்ன பிற பிளவுகள் அத்தனையும் மாண்டு மறைந்து ஒழிந்து போய்விடுகின்றன.

அதுபோலவே, திருக்குறள் என்கிற பிரச்சினை வருகிற போதும் தமிழர் சமுதாயம் முழுவதும் ஒரே சமுதாயமாகி விடுகிறது.

திருக்குறள் நெறியே தமிழரின் நெறி என்கிற கருத்து, விரைந்து பரவி வருகிறது.

எக் கட்சியினரும், எந் நாட்டினரும், எம் மதத்தினரும், எக் கருத்தவரும் ஒத்த குரலில் போற்றிடும் உயர் தனிச் சிறப்பு, திருக்குறளுக்கு உண்டு.

குறள், தமிழகத்தின் கரு ஆலம். உலகத்தின் அறிவு வளர்ச்சிக்கு, தமிழகம் அளித்திருக்கும் ஒப்பற்ற காணிக்கை, திருக்குறள்.

---

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னார்: "டிக்கன்ஸ் ஒவ்வொரு அங்குலமும் ஒரு உண்மையான மனிதர், சிறந்த எழுத்தாளர். கண்ணியமும் அன்பும் ஆற்றலும் அமைந்தவர். அவர் பிரிவு என் இதயத்தில் துன்பத்தை வழிந்தோடச் செய்கிறது."

வறுமையில் உழன்று தன் ஓயாத உழைப்பால் சிறந்த எழுத்தாளனாகி புது மலர்ச்சி எண்ணங்கள் தோய்ந்த கருத்துச் சிற்பங்களைப் படைத்து ஆயிரமாயிரவர் இதயங்களில் அறிவொளியைப் பாய்ச்சி புகழின் உச்சியிலே பவனி வந்த சார்லஸ் டிக்கன்ஸ் போன்ற எழுத்துச் சிற்பிகள் பலர் தேவை, நம் தாயகத்துக்கு—திராவிடத்துக்கு.

(போர்வாள்)

சேக்ஷ்பியர் என்கிற சொல்லைக் கேட்டவுடனே ஒவ்வோர் ஆங்கிலேயனும் பூரிப்படைகிறான். பெருமையும் மகிழ்ச்சியும் ஒருங்கே கொள்கிறான். இங்கிலாந்தின் உயிர்த் துடிப்புகள் அத்தனையையும் தன்னகத்தே கொண்டிருக்கும் தன்னிகரில்லா ஏடு, சேக்ஷ்பியரின் அமர இலக்கியம் என்று அவன் எண்ணுகிறான். அந்த எண்ணம், அவன் உள்ளத்தில் தென்றலென உலவுகிறது. தேனருவி தனைப் பாய்ச்சுகிறது.

ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் அப்படித்தான் திருக்குறள் என்னும் சொல் தெவிட்டாத தீங்கரும்பாகத் தித்திக்கிறது.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணிபோலவும், அள்ள அள்ளக் குறையாத பெருநிதி போலவும், படிக்கப் படிக்கப் பேரறிவு ஊட்டும் பெருஞ் சுவடி, குறள் என்பதை எல்லாத் தமிழர்களும் அறிந்திருக்கின்றனர்.

இங்ஙனமாகத் தமிழ் மக்கள் அனைவருடைய உள்ளத்தையும் தன்பால ஈர்க்கத் தக்க பேராற்றல் படைத்திருக்கும் திருக்குறளின் பெயரால், ஆண்டுதோறும் ஒரு விழா நடைபெற வேண்டியது மிக மிக அவசியமாகும்.

திருக்குறள் திருவிழா ஆண்டுதோறும் நடைபெறுவது, குறள் நெறியை மக்களுக்கு மீண்டும் மீண்டும் நினைவூட்டும் அரியதோர் வாய்ப்பாகத் திகழும்.

ஆனால் திருவள்ளுவர் பிறந்த நாள் இதுதான் என்று அறுதியிட்டுக் கூறுவதற்கு வரலாற்று ஆதாரம் எதுவுமில்லை.

எனவே, நாமாக ஒரு நாளைக் குறிப்பிட்டு, அதனைத்தான் திருவள்ளுவர் திருநாள் என்று கொண்டாட வேண்டியிருக்கிறது.

கோடை விடுமுறைக்குப் பிறகு பள்ளிக் கூடங்கள் கல்லூரிகள் ஆகியவை திறக்கப்படும் மாதம் ஜூலையாக இருப்பதாலும் விழாக்களைச் சிறப்புறக் கொண்டாடுதற்குரிய ஆவலும் உணர்ச்சியும்வேறெவரையும்விட மாணவர்களிடமே மிகுதியாகக் காணப்படுவதாலும், மாணவர் உலகிலே ஒரு புது எழுச்சியும் புத்தார்வமும் பிறக்கும் காலம் ஜூலையாக இருப்பதாலும், அம் மாதத்தின் இறுதி வாரத்தைத் திருவள்ளுவர் வாரமாகக் கொண்டாடுவதும், அந்த வாரத்தில் ஏதேனும் ஒரு நாளை திருவள்ளுவர் திருநாள் என்று தனித்துக் குறிப்பிட்டுப் போற்றி மகிழ்வதும ஏற்புடைய செயல்களாகும்'

இந்த முடிவைத் தீர்மான வடிவில் உருவாக்கித் தமிழ் மக்கள் அனைவர் முன்னிலையிலும் வைத்தது, அண்மையில் சிதம்பரத்தில் கூடிய சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாடு.

மாநாட்டின் முடிவை வலியுறுத்தித் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு ஆக்க வேலைகள் பல

வற்றில் ஈடுபட்டது, சென்னைப் புரசைக் குறள்நெறிக் கழகம்.

இவற்றின் விளைவாக, இந்த ஆண்டில், தமிழ்நாடு முழுவதிலும், ஜூலை இறுதிவாரம், திருவள்ளுவர் வாரமாகப் பேரொளி வீசித் திகழ்ந்தது.

அந்த ஏழு நாட்களிலும், தமிழ் நாட்டில், திருக்குறளின் சிறப்பை விளக்கும் பொதுக் கூட்டங்கள் எண்ணற்றவை நடைபெற்றிருக்கின்றன.

பட்டிதொட்டியெங்கும் விழா கொண்டாடப்பட்டிருக்கிறது.

கழகங்கள் அத்தனையும் விழாவில் பங்கேற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்த விழாவைப் பொறுத்த வரையில், மதவேற்றுமைகள் மறைந்தன. சாதிச் சழக்குகள் சாய்ந்தன. கட்சிப் பூசல்கள் அழிந்தன. கொள்கைப் போராட்டங்களும் தொலைந்தன. தமிழ் இனம் முழுவதும் ஒத்த உணர்ச்சியுடனும் ஒத்த மகிழ்ச்சியுடனும் விழாவை நடத்தியிருக்கிறது.

தமிழ் மக்களை ஒன்று திரட்டும் போாற்றல் குறளுக்கு உண்டு என்னும் பேருண்மையை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது இந்த விழா.

விழா ஆண்டுதோறும் நடைபெற வேண்டும். நடத்துவர் தமிழர். அதிலே நமக்கு ஐயம் துளியுமில்லை.

ஆனால் இந்த விழாவின் சார்பில் அரசாங்கத்தின் கடமை ஒன்று உண்டு.

ஜூலை இறுதி வாரத்தில், ஏதேனும் ஒரு நாளை, திருவள்ளுவர் திருநாள் என்கிற பெயரால் விடுமுறை நாளாக்க வேண்டும் நமது அரசாங்கம்.

திருவள்ளுவரின் அரிய ஏட்டிற்கு நாம் செலுத்தும் பரியாதையாக மட்டுமல்ல, தமிழ் மக்களின் ஒற்றுமைக்கு அரசாங்கத்தினர் எடுத்துக்கொள்ளும் முயற்சியாகவும் அமையும் அத்தகு நற்செயல்.

இந்த ஆண்டே அதனைச் செய்திருக்கலாம். தவறிவிட்டனர் அரசாங்கத்தினர். போனது போகட்டும். அடுத்த ஆண்டிலாவது இந்த விடுமுறையை அளிக்க இப்போதே முடிவு செய்யட்டும்.

திருவள்ளுவரின் பெயரால் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபடும் வாய்ப்பை வளர்க்க வேண்டிய பொறுப்பு அரசியலாருக்கு உண்டு.

விடுமுறையை அளிக்கட்டும். வாய்ப்பை வளர்க்கட்டும்.

வெல்க திருக்குறள்! வாழ்க குறள் நெறி!

# செய்திச் சுருள்

## தமிழகமும் ஆந்திரமும்

தற்போது ஆந்திர மாநிலத்தில் உள்ள, ஆனால் நியாயப்படி தமிழ்நாட்டைச் சேரவேண்டிய எல்லாப் பகுதிகளும் இந்த ஆண்டின் முடிவிற்குள் நமக்குக் கிடைத்துவிடும் என்று அமைச்சர் சுப்ரமண்யனார் சென்னை சட்டசபையில் ஆகஸ்டு 9-ம் தேதியன்று அறிவித்திருக்கிறார்.

## உரிமைப் போராட்டம்

திருவாங்கூர்—கொச்சியில் உள்ள தமிழ்ப் பகுதிகள், தமிழகத்துடன் சேர்க்கப்படவேண்டும் என்கிற நியாயமான கோரிக்கையை வற்புறுத்தி, அந்தப் பகுதியில் உள்ள தமிழ் மக்கள் சென்ற ஒரு மாத காலமாக அறப்போர் நடத்தி வந்தனர். நீதி மன்றங்கள், மத்திய சர்க்காரின் அலுவலகங்கள் ஆகியவற்றின்முன் அமைதியான முறையில் மறியல் நடைபெற்று வந்தது. ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் இந்த மறியலை முன்னிட்டு இதுவரை கைது செய்யப்பட்டிருக்கின்றனர். ஆகஸ்டு 6-ம் நாள் திராவிட முன்னேற்றக் கழகம், இந்தப் போராட்டத்தை ஆதரித்து, நாகர்கோயில், செங்கோட்டை ஆகிய இரண்டு இடங்களிலும் அடையாள மறியல் நடத்தி, நூறுபேர் வரை கைதாகியிருக்கின்றனர். ஆகஸ்டு 11-ம் நாள், திருவாங்கூர் கொச்சித் தமிழ்ப் பகுதிகளின் விடுதலை நாளாக அந்தப் பகுதி மக்களால் கொண்டாடப்பட்டது. விடுதலை தினம் கொண்டாடிய மாணவர்களின் ஊர்வலத்தின்மீது தடியடிப் பிரயோகமும், மக்கள் ஊர்வலத்தின் மீது மூன்று இடங்களில் துப்பாக்கிப் பிரயோகமும் நடைபெற்றிருக்கிறது.

## மதுவிலக்குக்கு எதிர்ப்பு

மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியாத காரணத்தாலும், அந்தத் திட்டம் தொடர்ந்து இருப்பதால் நன்மையைவிடத் தீமையே அதிகம் விளைவதாலும், அந்தத் திட்டத்தின் காரணமாகக் கள்ளச் சாராயம் காய்ச்சும் பணி அளவுக்கு மீறி வளர்ந்துவிட்டதாலும், அதனை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று வற்புறுத்தி, ஆந்திர மாநிலத்தில் இதுபோது தீவிர மறியல் நடைபெற்று வருகிறது. கிருஷிக் லோக் கட்சியினர், மறியலில் தீவிர பங்கெடுத்திருக்கின்றனர். இந்த மறியலை முன்னிட்டு, இதுவரை, 1537 பேர் சிறைப்பட்டிருக்கின்றனர். இவர்களில் 23 பேர் பெண்கள்.

## நஷ்ட ஈடு

1952 டிசம்பர் 15-ம் நாளன்று தனி ஆந்திர மாகாணம் தேவை

என்பதை வற்புறுத்துவதற்காக நடைபெற்ற கிளர்ச்சியின்போது, போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனரல்லவா? அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக மாண்டு போனவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு அளிப்பதென்று ஆந்திர அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

## தேங்காய்க்குள் பாம்பு!

கல்லுக்குள் தேரையும், தாமம் பூவுக்குள் சிறு நாகமும் இரும்பு துண்டு என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், தேங்காய்க்குள் பாம்பு இருக்கும் என்று நாம் கேள்விப்பட்டதே இல்லை. ஆனால், அப்படி ஒரு நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றிருக்கிறது. மலேயாவில், கோலாலம்பூருக்கருகில் உள்ள கிராமம் ஒன்றில், ஒரு போலீஸ்காரனின் மகள், தேங்காய் ஒன்றை உடைக்க முயன்ற போது, தேங்காய்க்குள் பாம்பு இருப்பதைக் கண்டு பயந்து, தேங்காயைப் பூமிக்குள் புதைத்துவிட்டாராம். பின்பு அவளது தந்தை வந்து தேங்காயைத் தோண்டியெடுத்து உடைத்ததில், அதில் மூன்றடி நீளமுள்ள பாம்பு இருக்கக் கண்டாராம். எப்படி வேடிக்கை!

## புதிய தங்க வயல்

இந்தியாவிலேயே, மைசூர் மாநிலத்தில் உள்ள கோலார் தங்க வயல்தான், மிகப் பெரிய என்—ஒரே ஒரு தங்கம் தரும் பூமியாகும். மற்றொரு மிகச் சிறிய தங்கச் சுரங்கம், ஐதராபாத்தில் உள்ள ஹாட்டி என்னும் இடத்தில் இருக்கிறது. கோலார் தங்க வயல், சுமார் 2000. தொழிலாளர்களுக்கு வேலை தருகிறது. கோலாரிலேயே இப்போது, மற்றோர் பகுதியில், ஏராளமான தங்கக் கற்கள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கற்களைத் தோண்டி யெடுக்கும் தொழிலை மேற்கொள்ள அரசாங்கம் முன் வருமானால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலையும், நம் நாட்டிற்கு ஏராளமான புதிய தங்கமும் கிடைக்கும்.

## தேசியக் கடன்

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் செலவுக்காக அரசாங்கத்தினர் மக்களிடமிருந்து எழுப்பி வரும் தேசியத் திட்டக் கடனுக்கு, இது வரை 125 கோடி ரூபாய் சேர்ந்திருக்கிறது. இந்தக் கடன், பத்து ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பித் தரப்படும். வட்டி வருடத்திற்கு $3\frac{1}{2}$ சதவிகிதம்.

## புதிய பட்டங்கள்

இந்தியா விடுதலை பெற்ற பிறகு இந்த ஆண்டில்தான் முதன் முறையாக, மத்திய அரசாங்கத்தால் பட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகஸ்டு 15-ம் தேதியன்று, பாரதரத்ன

என்கிற பட்டம், டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், சர். சி. வி. ராமன், சி. ராஜகோபாலாச்சாரியார் ஆகியோருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. பத்ம விபூஷன் என்கிற மற்றொரு வகைப் பட்டம், டாக்டர் லட்சுமணசாமி முதலியார், பி. ஜி. கெர், வி.கே. கிருஷ்ணமேனன், நந்தாலால் போஸ், கவிஞர் வள்ளத்தோல், எம். எஸ். சுப்புலட்சுமி ஆகியோருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சுதந்தர தினத்தன்று, இந்திய அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள ஒரு விசேட கெஜட்டின் மூலமாகக் குடியரசுத் தலைவர் இந்தப் பட்டங்களை அளித்திருக்கின்றார்.

## மகத்தான இழப்பு

சென்னை மாநிலத்தில் கிடங்குகளில் குவித்து வைத்திருக்கும் உணவுப் பொருள்களில், 10,345 மணங்கு உணவுத் தான்யங்கள் கெட்டுப் போய்விட்டதால், அரசாங்கத்திற்கு சுமார் 4 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதாம். தகவல் தந்திருப்பவர், நிதி அமைச்சர். தரப்பட்ட இடம், சட்டசபை.

## வடநாட்டில் வெள்ளம்

வடநாட்டில் உள்ள கோசி, பிரம்மபுத்ரா ஆகிய இரு நதிகளில், ஜூலை முதல் வாரத்தில் ஒரு முறையும், ஆகஸ்டு மூன்றாவது வாரத்தில் ஒரு முறையுமாக ஏற்பட்டுள்ள பிரம்மாண்டமான வெள்ளப் பெருக்கின் விளைவாக அஸ்ஸாம், பிஹார் ஆகிய மாநிலங்களில், அளவற்ற பொருள் நஷ்டமும், ஏராளமான உயிர்ச் சேதமும் ஏற்பட்டிருக்கிறது. ஆயிரக் கணக்கான மக்கள் வீடிழந்து தவிக்கின்றனர். எண்ணற்ற கிராமங்கள், சுற்றிலும் வெள்ளம் சூழ்ந்துவிட்ட காரணத்தால், பிற பகுதிகளுடன் போக்கு வரத்து வசதியின்றித் தத்தளிக்கின்றன. டியோரியா மாவட்டத்தில், 100 சதுர மைல் சுற்றளவுள்ள 90 கிராமங்கள், சில நாட்கள் வரை, தண்ணீருக்குள் மூழ்கிக் கிடந்தனவாம். சித்தலக்யா என்னும் கிளைநதி, நாராயண்கஞ்ச் என்னும் பெரியதோர் நகரத்தையே, தண்ணீருக்குள் மூழ்கடித்து விட்டதாம். போக்குவரத்து வசதியின்மை காரணமாக அரசாங்க அலுவலங்கள் பல, மூடியபடியே கிடக்கின்றவாம். சென்ற இருபதாண்டுக் காலத்தில் இத்துணைப் பெரிய வெள்ளம் ஏற்பட்டதே இல்லையாம்.

## சேலத்தில் நில நடுக்கம்!

சேலம் நகரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும், ஆகஸ்டு, 2-ம் நாள் காலை, சுமார் 5-40 மணிக்கு, சில விநாடிகள், இலேசான நில நடுக்கம் ஏற்பட்டதாம். சேதம் ஏதும் இல்லை என்றும், சில வீடுகளின் கதவுகள் படபடவென்று அடித்துக் கொண்டன என்றும் தெரிய வருகிறது.

## சிங்கத்தின் கூண்டுக்குள்ளே சிங்காரத் திருமணம்!

ஜூலை 31-ம் நாளன்று, அபெர்டீன் என்னும் இடத்தில் நடைபெற்ற ஒரு திருமணம் மிகவும் விசித்திரமானதாக இருக்கிறது. 49 வயது படைத்த பூபி மேயர் என்னும் சர்க்கஸ் வித்தைக்காரர் ஒருவர், 39 வயது படைத்த நூர்மரி கிள்ளியான் என்னும் மாதொருத்தியை சிங்கத்தின் கூண்டுக்குள் இருந்தபடி திருமணம் செய்துகொண்டாராம். மணமக்கள் இருவரின் எதிரே, ஏழு பெண் சிங்கங்கள், ஒரு கோபுரம் போல நின்றுகொண்டு, திருமணச் சடங்குகள் முடியும் வரையில், வணக்கம் செய்துகொண்டிருந்தனவாம். இந்த அபூர்வ நிகழ்ச்சியை 500 பேர் கட்டணம் கொடுத்துப் பார்வையிட்டனராம். அந்தக் கட்டணத்தின் வாயிலாக வசூலாகிய 670 ரூபாய், திருமணப் பரிசாக அந்தத் தம்பதிகளுக்கு வழங்கப்பட்டதாம்.

## உலகம் சுற்றும் கால்நடை வீரன்

சென்ற உலகப் போரின் போது, தன் ஒரு கண், ஒரு கால், இரண்டையும் இழந்துவிட்ட கேப்டன் மொரேல் என்னும் பிரெஞ்சுப் போர் வீரர், கால்நடையாகவே உலகம் முழுவதையும் சுற்றிப் பார்ப்பது என்னும் முடிவுக்கு வந்து தன் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார். ஆச்சரியம் — ஆனால் உண்மை — அவருடைய உடலில் இதுவரை 31 ஆப்பரேஷன்கள் செய்யப்பட்டிருக்கின்றன. என்றாலும் அவருடைய நெஞ்சுஉறுதி துளியும் குறையவில்லை. பாரிசிலிருந்து ரோம் வரையில் பயணம் முடிந்துவிட்டது. பயணத்தின் அடுத்த கட்டம், இந்தியா—ஜப்பான்—தென் அமெரிக்கா ஆகிய நாடுகளாம். மன உறுதியின் மாண்பு எத்தகையது என்பதை விளக்குகிறார் வீரர் மொரேல். கால் போயிற்று — கண் போயிற்று — எனினும் உள்ள உரம் போகவில்லை — எனவே, உலகப் பயணத்தையும் அவரால் தொடங்க முடிகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

மனித ரத்தத்தில் 3 சத விகிதம் உப்பு இருக்கிறது. தினசரி வாழ்க்கையில் மனிதனுக்கு சராசரி 10 கிராம் உப்பு தேவை. உட்கொள்ளும் உணவிலிருந்து இது மனிதனுக்குக் கிடைக்கிறது.

1953-ம் ஆண்டு ஒன்றில் மட்டும், பண்டங்களை விளம்பரம் செய்வதற்காக, மொத்தம் 306 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது பிரிட்டனில். அந்த ஆண்டிற்குரிய அந்த நாட்டின் மொத்த வருமானத்தில் இது சுமார் $1\frac{1}{2}$ சத விகிதம் ஆகிறது. ஆனால் அமெரிக்காவோ, இத்துறையில், பிரிட்டனையும் தோற்கடிக்கும் தன்மை படைத்ததாக இருக்கிறது.

# ஒற்றையாசிரியர் பள்ளிகள்

## ஆசிரியர்களின் தகுதியும், ஊதிய விகிதமும்

மத்திய அரசாங்கத்தின் திட்டப்படி, சென்னை மாநிலத்தில் ஏற்படுத்தப்பட இருக்கிற ஒற்றை யாசிரியர் பள்ளிகளில் நியமிக்கப் படும் ஆசிரியர்களின் தகுதியையும் ஊதிய விகிதத்தையும் குறிப் பிட்டு, சென்னை அரசாங்கத்தினர், ஆகஸ்ட் 21-ம் தேதியன்று ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர்.

இந்த உத்தரவின்படி, எஸ். எஸ். எல். சி. அல்லது மெட்ரிகு லேஷன் தேர்ச்சி பெற்றவர்கள் — செகண்டரி கிரேட் பயிற்சி பெற்றவர்கள் — பட்டதாரிகள், இன்டர்மீடியட் வகுப்பில் படித்த வர்கள் ஆகிவர்கள் மட்டுமே இப் பள்ளிகளில் ஆசிரியர்களாகும் தகுதி உடையவர்களாவர்.

ஆசிரியப் பயிற்சி பெறாத (Untrained) மெட்ரிகுலேட்டுகள், எஸ். எஸ். எல். சிகள், இண்டர்மீடியட்டுகள் ஆகியோருக்கு அடிப் படை மாத ஊதியம் 40 ரூபாய். செகண்டரி கிரேட் பயிற்சி பெற்ற வர்களுக்கு, அந்தந்த மாவட்டத்தில் இப்போது அதே வகை ஆசிரி யர்கள் பெற்றுவருகிற அதே ஊதிய விகிதம் தரப்படும். பயிற்சி பெறாத பட்டதாரிகளுக்கு மாத ஊதியம் 50 ரூபாயாகும். இவர் கள் அனைவருக்கும் மாத ஊதியம் தவிர, வழக்கம்போல, பஞ்சப்படி யும் தரப்படும்.

வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், 4 வாரங்கள் முதல் 6 வாரங்கள் வரை ஆசிரியர் பயிற்சி அளிக்கப்படுவர். இந்தப் பயிற்சிக் காலத்திற்கும், மேலே குறிப்பிட்ட சம்பள விகிதப்படி, ஊதியம் அளிககப்படும்.

உடனடியாக இந்தப் பள்ளிகள் பணியாற்றவேண்டும் என்பதற் காக, ஜில்லா போர்டுகள் முதலிய உள்ளாட்சி மன்றங்கள் இவற்றை எடுத்து நடத்த வசதி ஏற்படுகிற வரையில், அரசாங்கத்தின் கல்வி இலாகாவே இவற்றை நேர்முகமாக நடத்திவரலாம் என்றும் அரசாங் கத்தார் அறிவித்திருக்கின்றனர்.

இந்தத் திட்டப்படி, பள்ளிக்கூடங்களே இல்லாத 1270 கிரா மங்களில், கிராமத்திற்கு ஒன்றாக, 1270 ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படும். இவை அல்லாமல், ஏற்கெனவே இருந்துவரும் ஆரம்பப் பள்ளிகளில், 200 புதிய வகுப்புகளும் தொடங்கப்படும்.

# பூமியினுள்ளே பிரயாணம்

(ஜி. கோரின்)

நம் வீட்டின் கொல்லையில் அல்லது வாயிற்புறத்தில் வெற்றிடமாயுள்ள பகுதியிலே ஒரு கிணறு வெட்டுவதாக எண்ணிக் கொள்வோம். கிணறு வெட்டத் தொடங்கும் தொழிலாளர்கள் முதலில் ஒருகுழியைத் தோண்டுகிறார்கள். அவர்களது கூரிய மண்வெட்டிகள் பசும் புல்லை வெட்டி வீழ்த்துகின்றன. விரைவில் புல் தரை பெயர்த்தெடுக்கப் படுகிறது. வழ வழப்பான அந்தக் கரிய மண்ணிலே புற்பூண்டுகளின் வேர்கள் நீட்டிக் கொண்டிருக்கின்றன. நாம் காணும் இம் மண்தான் பூமியின் மேல் மட்டத்திலுள்ள முதல் அடுக்கு.

குழி ஆழமாக ஆக அதன் அருகில் குவியும் களிமண் குவியலும் உயர்ந்து செல்கிறது. இந்தக் களி மண்ணிலே உடைந்த கற்களும் சாம்பலும் குச்சிகளும் எரிந்த மரத் துண்டுகளும் காணப்படுகின்றன. பூமியின் மேல் அடுக்கைச் சேர்ந்த இம் மண்ணை உண்டாக்குவதில் மனிதனுக்கும் ஒரு பங்கு இருந்திருக்கிறது; மனிதனது பௌதீக நாகரீகத்தின், பண்பாட்டின் மிச்ச சொச்சங்கள் இம் மண்ணிலே காணக்கிடக்கின்றன. எனவே விஞ்ஞானிகள் இவ்வடுக்கைப் "பண்பட்ட" அடுக்கு என்றழைக்கின்றனர். இப்பிரபஞ்சத்தில் முதல் முதல் நகரம் தோன்றியதன் பின் இங்கே கட்டிடங்கள் எழுப்பப் படுவதும் குழிகள் தோண்டப்படுவதும் மூடப்படுவதும் மீண்டும்தோண்டப்படுவதுமாக எவ்வளவோ வேலைகள் நடந்தேறியுள்ளன. தீப்பிடிப்பதும் மீண்டும் யாவும் புனரமைக்கப்படுவதுமாக எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இவை யாவும் விட்டுச் சென்றசின்னங்களும்,வாழையடி வாழையாகப்பல்வேறுதலைமுறையினரும் இங்குவாழ்ந்துள்ளதின் விளைவுகளும் சேர்ந்தே பூமியின் இந்த மேல் அடுக்கை உருவாக்கின.

மேற்கொண்டு தோண்டிஎடுக்கப்படும் மண்ணில் குச்சிகளும் உடைந்த செங்கற்களும் காணப் படவில்லை. குழியின அடிமட்டத்தில் வெளுநர் மஞ்சள நிறமுள்ள களிமண் மயமாயிருக்கிறது. தொடர்ந்து அவர்கள் தோண்டுகிறார்கள். ஒரு கஜத்திற்கு மேல் தோண்டி இரண்டாவது கஜமும் தோண்டியாகி விட்டது. திடீரென, எதிர்பாராத சில பொருள்கள் கிடைக்கின்றன. சுமார் இரண்டு கஜம் தோன்றியதும் சாம்பற் கட்டிகளால் சூழப்பெற்ற நொருங்கிய எலும்புத் துண்டுகளையும் கூர் முனைகளையும் கல்லடைக் கண்

போன்ற துவாரங்களையுடைய ஒரு சிறு கோடாலியையும் காண்கிறோம். பச்சை நிறமேறிக் கிடக்கிறது இக் கோடாலி.

தாமிர ஆக்ஸைடு பச்சை நிறமுடையதென்பது நமக்குத் தெரியும். இந்தக் கோடாலி செம்பு அல்லது வெண்கலத்தாலானதென்பது விளங்குகிறது. வெண்கலக் கோடாலிகள் உபயோகிக்கப்பட்ட காலம் எது? இரும்பை உருக்குவதெப்படி என்று அறியாத 3000 அல்லது அதற்கு முற்பட்ட ஆண்டுகளுக்கு முன்னேதான் மனிதர்கள் வெண்கலக் கோடாலிகளை உபயோகித்தனர். 3000 வருடங்களுக்கு முன்பு இதே இடத்தில் வெண்கலக் கால மனிதர்கள் வசித்தனர் போலும். தீ மூட்டிவிட்டு அதில் வெண்கலக் கலவையை உருக்கி கல்லால் அல்லது களிமண்ணாலான அச்சுகளிலே அவர்கள் ஊற்றியிருக்க வேண்டும். அந்தப் புராதன கால உலோக வேலையாளர்கள் இவ்வாறு வேலை செய்துகொண்டிருக்கும் போது எதையோ கண்டுபயந்து அவசரத்தில் கோடாலியை அப்படியே போட்டுவிட்டு ஓடியிருக்கிறார்கள்.

இவ்வாறு பூமியின் உட்பகுதிக்குள் நாம் செய்யும் பிரயாணம் பழங்காலத்தினுள் செல்லும் ஓர் பிரயாணமாகவும் நிகழ்கிறது. இரண்டு மீட்டர் (ஒரு மீட்டர் = சுமார் $3^1/_4$ அடி) ஆழத்திற்கு பூமியினுள் சென்றதுமே நாம் வெண்கலக் காலத்திற்கு வந்து விடுகிறோம். இன்னும் கீழே உள்ள அடுக்குகளுக்குச் செல்வோமானால், அவை எவ்வளவு தொன்மையான காலங்கள் பற்றி நமக்கு எடுத்துக்கூறும்!

இப்பொழுது நாம் களிமண் அடுக்கைத் தாண்டிக் கீழே சென்று விட்டோம். கெட்டியான சிவப்புக் களிமண் தென்படுகிறது. இதனுள் பெரும் பெரும் பாறைகள்—வலிமையான கருங்கல் துண்டுகள்—காணப்படுகின்றன. சமவெளிப் பிரதேசத்திலே இந்தப் பாராங் கற்கள் எங்கிருந்து வந்தன? பழங்காலத்தில் உருகி வந்த பனிக்கட்டிப் பெருக்கு இவற்றை இழுத்துக் கொண்டு வந்து இங்கு விட்டிருக்க வேண்டும்.

அந்தப் பழங்காலப்பனிக்கட்டி ஆறுகள் நாம் இக்காலத்தில் காணக்கூடியவற்றை விட மிகவும் பிரம்மாண்டமானவை. ரஷ்யாவின் ஐரோப்பியப்பகுதியின் வடபாகம் உள்பட வடக்குஐரோப்பா பூராவுமே பாறை போன்ற இந்த உறை பனிப் படலத்தால் அக்காலத்தில் மூடப்பட்டுக் கிடந்தது. ஏறக்குறைய 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன் இந்த உறை பனிப் படலம் ஐரோப்பாக் கண்டம் முழுவதிலும் வியாபித்து விட்டது. மேலும் மேலும் உருகி தெற்கு நோக்கி வந்த பூதாகாரமான இந்தப் பனிப் பாறை ஆறுகள் பின்லாந்திலிருந்தும் கரேலியாவிலிருந்தும் அபரிமிதமான

அளவில் கற்பாறைகளையும் கருங்கல் துண்டுகளையும் சமவெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு வந்து சேர்த்தன. பின்னர் சீதோஷ்ணம் மாறி வெப்பம் உண்டானதும் பனிக்கட்டிகள் உருகி ஓடின. ஆனால் பாராங்கற்கள் மட்டும் சமவெளிகளிலேயே தங்கின. இதை அடுத்து மீண்டுமோர் முறை உறை பனிப் படலக் காலம் ஏற்பட்டு, திரும்பவும் பனிக்கட்டிகள் உருகி தெற்கு நோக்கி நகர்ந்து வந்தன. பூதத்துவ விஞ்ஞானத்தின் அளவுகளைக் கொண்டு பார்த்தால், இந்த உறை பனிப் படல யுகங்கள் மிகச் சமீப காலத்தில் தான் முடிவுற்ற தென்று கூற வேண்டும். இன்று லெனின்கிராட் நகர் இருக்கும் பிரதேசம் 16 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தான் இந்த உறை பனிப் படலத்திலிருந்து விடுதலை பெற்றது.

புராதன மனிதர்கள் இப்பனிக் கட்டி ஆறுகளை நேரே கண்ணால் கண்டிருக்கிறார்கள். மிருகங்களின் தோலை ஆடையாக அணிந்துகொண்டு, கற்களால் செய்யப்பட்ட கருவிகளை ஆயுதங்களாகப் பெற்று இம் மனிதர்கள் இன்று யுக்ரைன் என்றழைக்கப்படும் பகுதியிலே அன்று வியாபித்திருந்த துந்த்ரா பிரதேசங்களிலும் சைபீரியாவைச் சேர்ந்த டெய்கா பிரதேசங்களிலும் வசித்தனர். இன்று அழிந்தொழிந்து போய்விட்ட 'மாம்பத்' எனப்படும் அடர்ந்த ரோமமுடைய ராட்சஸ யானைகளை அவர்கள் வேட்டையாடி வாழ்ந்தனர்.

பூமியின் கீழ் நாம் செய்யும் பிரயாணத்தின் போது கிடைத்துள்ள இந்தப் பாறைக் கட்டிகளும், சிவப்புக் களிமண்ணும் இக்காலத்திலேதான் உருவாயின.

மேலும் கீழே செல்வோம். கூழாங்கற்களும் காவியும் சிவப்புமான களிமண்ணும் மாறி மாறி அடுக்கடுக்காய் அமைந்துள்ளன. இங்கே நமக்கு மற்றொரு பொருள் கிடைக்கிறது. கூழாங்கல் அடுக்கொன்றிலே ஒரு கொடிய மிருகத்தின் மண்டை ஓடு அகப்படுகிறது. அநேகமாய் சேதமெதுவுமின்றிப் பாதுகாக்கப்பட்டிருக்கும் இந்த மண்டை ஓட்டில் பயங்கரமான இரு கோரப் பற்கள் கல்லால் செய்யப்பெற்ற வாட்கள்போல் தோற்றமளிக்கின்றன. 'வாள்-பல்' புலி என்னும் இக்கொடிய விலங்கு பனிக் கட்டி ஆறுகளின் காலத்திலேயே மறைந்தொழிந்து போயிற்று. நம் குதிரைகளின் மூதாதையான 'மெரிப்பஸ்' என்ற பிராணியை வேட்டையாடிக் கொன்று இப்புலி ஜீவித்தது. நமது மூதாதைகளான குரங்குகள் அந்நாட்களிலே மரங்களில் வசித்தன.

இது வரை நாம் கண்டது யாவும் 'டெர்ஷியரி' (அதாவது மூன்றாவது) சகாப்தத்திலே, இன்றைக்கு சுமார் 2-லிருந்து $2^1/_2$ கோடி வருடங்களுக்கு முன் நடந்தவையாகும். தரைக்குள் கிட்டத்தட்ட 20 மீட்டர்

தான் நாம் பிரயாணம் செய்திருப்போம்—இதற்குள்ளாகவே இவ்வளவு தொன்மையான காலத்தை வந்தடைந்து விட்டோம்! இவ்விடத்தில் 20 மீட்டர் ஆழத்திற்குள் 2 கோடி ஆண்டுகளின் சரித்திரம் புதைந்து கிடக்கிறது. வேறொரு இடத்தில் இந்தச் சரித்திரம் பல நூறு மீட்டர்களுக்குக் கீழே தென்படலாம். மற்றும் பிறிதொரு இடத்திலே இது மேல் தரையிலேயும் கிடைத்து விடலாம்.

மூன்றாவது அடுக்கின் கீழ் ஏரிதில் நொறுங்கித் தூளாகக் கூடிய கரிய களிமண் அடுக்கு ஒன்று ஆழமாகப் பதிந்துள்ளது. இந்தக் களிமண்ணில் கூர் முனையுடைய கூவை போன்ற கிளிஞ்சில்கள் அதிகம் அகப்படுகின்றன. முன்பெல்லாம் மக்கள் இவற்றைப் பேய் விரல்களென்றும் இடிக் கற்களென்றும் அழைத்தனர். ஆனால் உண்மையில் இவை விரலுடனோ இடியுடனோ எவ்வகையிலும் சம்பந்தப்பட்டவையல்ல. கணவாய் மீன் போன்ற ஒரு வகை கடல் ஜந்துக்களின் கிளிஞ்சில்கள் இவை. 'பெலெம்னைட்'களென அழைக்கப்படும் இந்த ஜந்துக்கள் நீண்ட காலத்திற்கு முன்பே அடியோடு அழிந்து போய் விட்டன.

கடல் ஜந்துக்கள் இங்கெப்படி வந்தன? முன்னொரு காலத்தில் இங்கொரு கடல் இருந்திருக்க வேண்டும். கிளிஞ்சில்கள் கடலடியில் விழுந்து அவற்றின் மீது பையப் பைய வண்டல் படிந்து கொண்டே வந்திருக்கவேண்டும். இந்த வண்டல்தான் நாளா வட்டத்தில் கரிய களிமண்ணாக மாறியிருக்கிறது.

இம்மாறுதல் ஏற்பட்டு எவ்வளவு காலமிருக்கும்? கிளிஞ்சில்களைச் சோதனை செய்து பார்க்கும் பூதத்துவ விஞ்ஞானி இந்த பெலெம்னைட்கள் 15 கோடி வருடங்களுக்கு முன் 'ஜுராஸிக்' சகாப்தத்திலே வசித்தன வென்று நமக்கு எடுத்துரைப்பார். ஜுராஸிக் சகாப்தத்திற்கும் டெர்டியரி சகாப்தத்திற்கும் இடையில் 'கிரெடேசியஸ்' சகாப்தம் என்றொரு சகாப்தமிருந்தது. ஆனால் நம் பிரயாணத்திலே இச் சகாப்தத்தை நாம் சந்திக்கவில்லை. நமது பூதத்துவ கல் "புத்தகத்திலே" எழுத்தில்லாத காலி ஏடுகள் கிடைத்துள்ளன. துரதிருஷ்டவசமாக இந்நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது. எல்லா சகாப்தங்களிலும் உண்டாக்கிய அடுக்குகள் யாவும் அப்படியேபழுதின்றிப் பாதுகாக்கப்பட்டுள்ள இடம் எதுவும் உலகில் இல்லை. படிவ அடுக்குகள் படிப்படியாக அமைந்து வந்த சகாப்தங்களும், இதற்கு மாறாக அடுக்குகள் கரைந்து அழிந்து விடும்—அதாவது சென்ற காலங்களில் உண்டான அடுக்குகளும் நீராலோ காற்றாலோ அடித்துக்கொண்டு போகப் படும் சகாப்தங்களும், ஒவ்வொரு பிரதேசத்தின் வரலாற்றிலும் மாறி மாறி ஏற்பட்டுள்ளன.

15 கோடி ஆண்டுகளுக்குமுன் ஊர் மனிதர் என்ற பேச்சுக்கே இடமில்லாமலிருந்தது. மனிதன் மட்டுமின்றி குதிரை, குரங்கு, சிங்கம், ஓநாய் போன்ற குட்டி போட்டுப் பால்கொடுக்கும் பிராணிகளே இருக்கவில்லை. அந்தக் காலத்திலே நிலம், நீர், ஆகாயம் —எங்கும் 'டிநஸோர்' என்றொரு மிருக வகைதான் ஆட்சி புரிந்து வந்தது. பிரம்மாண்ட வடிவமுடைய கோர மிருகங்கள் பல இவ்வகையைச் சேர்ந்ததாகும். தழையைத் தின்று ஜீவிக்கும் ஒரு வகை டினோஸோரான 'பிரொன்டொஸாரசை' மாமிசக் குன்றுகள் போலிருந்த இந்தப் பூதாகர மிருகங்கள் 20 மீட்டர் (சுமார் 65 அடி) நீளமிருந்தன. எடையில் இவை யானையைப்போல் 8 மடங்கிருந்தன. கழுத்தை உயர்த்தியதும் இவை இலகுவில் மூன்ருவது மாடி ஜன்னல் வழியே உள்ளே பார்க்க முடியும்.

கிரெடேசியஸ் சகாப்தத்தின் முடிவில், அதாவது 6 கோடி வருடங்களுக்கு முன்னே, இந்த பூதாகர டினோஸோர்கள் பூண்டோடு ஒழிந்து விட்டன. இம் மிருகங்கள் மறைந்து நெடுங் காலத்திற்கு பின்புதான் மனிதன் தோன்றினன்; மனிதன் தோன்றி ஒரு சில லட்ச வருடங்கள்தான் ஆகின்றன. உயிருடைய டினொஸோர்களை மனிதன் பார்த்ததில்லை. ஆனல் டினோஸோர்களின் எலும்புகள் பூமியின் பாறையிலே கிடைத்துள்ளன. இந்தப் பூதாகர மிருகங்களின் முழு எலும்புக் கூடுகளையும் இன்று நாம் பொருட் காட்சி சாலைகளிலே காணலாம்.

இப்பொழுது நாம் கரிய களிமண் அடுக்கின் பகுதியை வந்தடைந்து விட்டோம். அதன் கீழ் சிவப்பு கூழாங்கல் பகுதிகளுள்ளன (சிவப்பு நிறம் பாலைவன சீதோஷ்ணத்தைக் குறிப்பிடுகிறது). இதற்கும் கீழ் வெளிர் நிறக் களிமண்ணும் பளிங்கு போன்ற சுண்ணும்புக் கற்களும் உப்புப் பாறையும் காணப்படுகின்றன. ஏரியோ அல்லது கடலோ முன்பொரு காலத்தில் இங்கிருந்து பின்னா வற்றிப்போயிருக்கவேண்டு மென்பதை இவை சுட்டிக்காட்டுகின்றன. மணல் பகுதி ஒன்றிலே பெருங் கோரப் பற்களையுடைய முன்பின் கண்டறியாத ஒரு பயங்கர மிருகத்தின் மண்டை ஓடு கிடைக்கிறது. புராதன காலத்தைச் சேர்ந்த ஒருவகை டினோஸோர் இது; பெர்மியன் சகாப்தத்தில் வாழ்ந்து கொண்டிருந்தது.

மென்மேலும் ஆழமாக நாம் கீழே சென்று கொண்டிருக்கிறோம். கூழாங்கல், சுண்ணும்புக்கல், களிமண் அடுக்குகளை ஒன்றன்பின் ஒன்ருய்க் கடந்து வருகிறோம். நிலக்கரி புரையோட்டம் ஒன்று இப்பொழுது நம் பாதையில் குறுக்கிடுகிறது. 'கார்போனிபெரஸ்' சகாப்தத்திற்கு (கரிக் காலம்) வந்துவிட்டோம் நாம்.

இக்காலத்தில்—கிட்டத்தட்ட 30 கோடி ஆண்டுகளுக்கு முன்னே—பூமியின் சிதோஷ்ணம் ஒத்த நிலையிலும் வெப்பமும் நீர்ப்பசையும் உடையதாகவும் இருந்தது. சிறு சிறு குடாக்களின் கரைகளிலும் சதுப்பு நிலப் பகுதிகளிலும் அடர்ந்த காடுகள் மண்டிக்கிடந்தன. மடிந்துவிழும் பெரும் பெரும் மரங்கள் நீருக்குள் நாளடைவில் மண்ணிலே புதைந்துபோய்க் கிடந்தன. தரைக்குள் மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளாகி காற்றோட்டமின்றிக்கிடந்து அழுகிய இம்மரங்களின் கிளைகள் கரி (கார்பன்) மயமாகின; அவை நிலக்கரியாக மாறின. இந்தக் கரியை எரித்துத்தான் இன்று நமது ரயில் இன்ஜின்கள் ஓட்டப்படுகின்றன; கட்டிடங்களுக்கு வெப்பமளிக்கப்படுகிறது; இயந்திரக் கருவிகள் இயக்குவிக்கப்படுகின்றன.

இந்த கார்போனிபெரஸ் காலத்துக் காட்டில் நீரிலும் நிலத்திலும் வாழும் பெரிய பிராணி ஒன்று தவழ்ந்து வந்தது. 'லொக்ஸொம்மா' என்று அழைக்கப்பட்டது இப் பிராணி. இதன் முட்டைகளிலிருந்து வெளிவந்த குஞ்சுகள் நம் காலத்துத் தவளைக் குஞ்சுகள்போல் நீரிலே வசித்தன! மீன்களைப் போல் நீரிலுள்ள பிராண வாயுவைக் கொண்டு ஜீவித்தன. தரையில் வசிக்கும் டினோஸார்கள் யாவும் பிறகாலத்தில்தான் பெர்மியன் சகாப்தத்தில்வரண்ட சிதோஷ்ணம் ஏற்பட்ட பின்புதான் தோன்றின.

நிலக்கரிக் கனியைக் கடந்து கீழே சென்றதும் சுண்ணாம்புக் கல் அடுக்கு தென்படுகிறது. நூற்றுக்கணக்கான மீட்டர்கள் பருமனுடைய இந்த அடுக்கு மிகவும் ஆழமாக வியாபித்துச் செல்கிறது. இங்கும் முன்பொரு காலத்தில் கடல் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் சுண்ணாம்புக் கற்கள் கடலின் அடியிலே எண்ணற்ற சின்னஞ் சிறு கிளிஞ்சல்களிலிருந்தும் நீரில் கரைந்துள்ள சுண்ணாம்பிலிருந்துமே உண்டாகின்றன. கடல் அடியில் இந்தச் சுண்ணாம்பு நூற்றுக்கணக்கான மீட்டர் பருமனுடைய சுண்ணாம்புக் கல் அடுக்காக மாறுவதற்கு எவ்வளவு கோடி வருடங்கள் பிடித்திருக்குமென்பதை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

Edited, Printed and Published by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 84/85, New St. Mannady Madras-1.